ஜகன்மோ

ஆசிரியை

வை.மு.கோதைநாயகி அம்மா

புதிய நாவல் ஆரம்பம்

நான் வந்து விட்டேன்

அனாதைப் பெண்

"மோகினி" ஆபீஸ்

தேரடித் தெரு

லிக்கேணி,

SL
m2U, N22JM
M36.13.11.
152996.

ல் மகத்தான 3-வது வாரம்.

ர மோஹன் மூவிடோன் கம்பெனியாரால்
ாமான பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட

சந்திரமோஹன

அல்லது

சமூகத்தொண்டு

என்னும் உயர்தர சமூக சீர்திருத்த தமிழ்ப் பேசும் படம்

15-10-36 முதல் மதுரை நியூ சினிமாவிலும்,
29-10-36 முதல் திருநெல்வேலி சரஸ்வதி டாக்கீஸிலும்,
திரளான மக்களுக்கு காக்ஷி அளித்து வருகின்றது.

சென்னை பிராட்வே டாக்கீஸிலும்,

கோயம்புத்தூர்—நியூ தியேட்டர்ஸ்
திருச்சி—வெல்லிங்டன் டாக்கீஸ்
தஞ்சை—நியூ ராஜாராம் டாக்கீஸ்
சேலம்—சென்டிரல் டாக்கீஸ்
மாயவரம்—சுந்தரம் டாக்கீஸ்
ஊர்க்காம்—கே. டாக்கீஸ்
காரைக்கால்—ஹமீத் டாக்கிஸ்

ஆகிய தியேட்டர்களிலும் இந்த இணையற்ற படத்தின்
மகத்தான ஆரம்ப தினங்களை எதிர்பாருங்கள்.

ாமது
ித்த
ப்

விவரங்களுக்கு :

தந்தி, 'மூவிடோன்.' போன் நெ. 54.

மோஹன் மூவிடோன் கம்பனி,

157- தெற்கு மாசி வீதி, மதுரை.

சேலம் எல்ஜின் டாக்கீஸிலும், காரைக்கால்
டாக்கீஸிலும், புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸ்

25-10-36 ஞாயிற்றுக்கிழமை குதூக

ஆரம்ப விழா

புண்ணிய புராண பேசும் படங்களில் தலை சிறந்து
விளங்கும்

இந்திர சபா

டி. கே. சுந்தரப்பா, கே. சாந்தா தேவி, ஜே. சுசீலா தேவி,
ஆகியோரும் மற்றும் உன்னத நடிகர்களும்
சேர்ந்து நடித்துள்ளனர்.

கண்ணைக் கவரும் காக்ஷிகளும், இன்சுவை தரும் இனிய கீதங்களும், உற்சாக மூட்டும் காதற் காக்ஷிகளும், அழகிய உடைகளும், அபாரமான சீன் ஜோடிப்புகளும், வயிறு குலுங்க நகைக்கச் செய்யும் ஹாஸ்யங்களும், அபரிமிதமாக நிறைந்துள்ளன.

ஆர். பிரகாஷ் டைரெக்ஷனில் சென்னை சவுண்டு ஸிடியில்
தயாரானது.

இதர ஊர் தியேட்டர்களில் ஆரம்ப தினத்தை
ஆவலுடன் எதிர்பாருங்கள் !

கைவசமிருக்கும் படம் :

சண்டைகளும், திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த
தமிழ்ப் பேசும் படம்

“ மதராஸ் மெயில் ”

விவரங்களுக்கு எழுதவும் :—
தந்தி : “ Teebeekey.”
போன் : நெ. 96

இந்திர டாக்கீஸ்,
59, மஞ்சணக்கார தெரு, மதுரை.

ADVERTISEMENT TRAIFF.

Rs. 10/-	for full page per insertion.			
Rs. 5/8-	„ half	„	„	„
Rs. 3/-	„ quarter „	„	„	
Rs. 12/-	„ Inner wrapper per insertion.			

Special Rates For Contract Advertisements.

ஞானமுள்ள பெற்றோர் தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

சிறுவர் அறிவுக் கதிர்

இரண்டாம் ஆண்டு

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப் பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித் துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக் கொண்டது. மாதிரிக் காப்பிக்கு ஐந்து காலணு ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா : உள்நாடு 12 அணு. வெளி நாடு ரூ. 1—4—0

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ். ஈரோடு, தென்னிந்தியா.

நீங்கள் இதைப் படித்ததுண்டா ?

குறைந்த சந்தா ! **சித்தன்** நிறைந்த செய்தி !

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

ஆசிரியர் : டாக்டர் C. P. சாமி.

இது கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதாரம், வைத்தியம் முதலிய விஷயங்களையும், அறிவு வளர்ச்சிக்கேதுவான பல கட்டுரைகளையும், இன்பக் கதைகள், உலக அதிசயங்கள், பெரியாரின் ஜீவிய சரிதைகள், செந்தமிழ்ப் பாக்கள், பெண் மக்கள் பகுதி, நாடகம், சினிமா இன்னும் பல அரிய விஷயங்கள் பொதிந்து வெளிவருகிறது.

வருட சந்தா: உள் நாடு அணு 8. வெளி நாடு ரூ. 1

மானேஜர் "சித்தன்" பழனி. S. I.

நமது விளம்பர விகிதம்

1 பக்கத்துக்கு ஒரு முறை	ரூ.	10	0	0
½ பக்கத்துக்கு ,,	,,	5	8	0
¼ பக்கத்துக்கு ,,	,,	3	0	0
முதற்பக்க உள்ளட்டைக்கு ஒரு முறை	,,	12	0	0
கடைசி பக்க உள்ளட்டைக்கு ,,	,,	10	0	0

நீண்ட கால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங்களுக்கும் தனிச் சலுகை காட்டப்படும். சினிமா, இன்ஷியூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு, முக்கியத்துவமும் பிராதான்யமும் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு நேரே விளம்பர மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

WANTED

Candidates for Telegraph and Station Master class. Allowance Rs. 28. Uniform, passage and quarter free. Service essential. Rules and Entrance form on annas eight. **Director, Royal Telegraph and Ry. Duties College, Bombay. 14.**

"லக்ஷ்மி"

ஓர் உயரிய தமிழ் மாதப் பத்திரிகை.
எளிய நடையில் பல அரிய விஷயங்களுடன்
மாதம் ஒரு முறை வெளி வரும்.

பெண்களும், குழந்தைகளும் ஆவலுடன் வாசிக்கக் கூடிய சுவை பொருந்தியது.

உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ.	1	0	0
வெளி நாட்டுக்கு வருட சந்தா ரூ.	1	8	0

மானேஜர், "லக்ஷ்மி" ஆபீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

அஞ்சா நெஞ்சம் கொண்டு அரசியல் பித்தலாட்டக்காரர்களையும், அநியாயச் சட்டங்களையும், அநீதியையும், ஆணவத்தையும், கச்சை கட்டி எதிர்த்து நிற்கும் சிறந்த தேசியப் பத்திரிகை.

எது ?

அதுதான்

இந்திய வாலிபன்

ஒரு சிறந்த மாதப் பத்திரிகை. ரஸமான குறிப்புகள், இன்பச் சிறுகதைகள் கொண்டு திகழ்வது. வருடச் சந்தா ரூ. 1—0—0. தனிப் பிரதி ஒரு அணா தான். ஏஜண்டுகள் தேவை. (ஆசிரியர் திரு. லோக சீதாராம்)

"இந்திய வாலிபன்" ஆபீஸ், துறையூர் போஸ்டு (Tri

4-வதாண்டுப் பரிசுகளின் விவரம்

தல் பரிசு
ரூ. 25.

2-வது பரிசு
ரூ. 15.

புது வருஷ
சந்தாவை டிசம்பர்
மாதம் 20-ந்தேதிக்குள் அனுப்பும்
சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு
6 பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு
இதிற்கண்ட பரிசுகள்
கொடுக்கப்படும்.

3-வது பரிசு
ரூ. 10

3 பரிசுகள்
ரூ. 5 விகிதம்

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனாமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

தயவு செய்து
புது வருஷ சந்தாவை
முன்பணமாக அனுப்புங்கள். உங்களது
சந்தா நம்பரை மறக்காமல்
எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
..கரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
...rks, Triplicane, Madras,

ஸ்ரீ

முதல் அதிகாரம்

சிறுமியின் களிப்பில் பெரும் புயலடித்தது

"அண்ணு! இந்த பெண்களெல்லாம் அலங்காரம் செய்துகொண்டு சந்தோஷமாக எங்கே செல்கிறூர்கள்? புதிது புதிதாக பாவாடை, சொக்காய், நகைகள் எல்லாம் சிங்காரித்திருப்பதைப் பார்த்தால் கல்யாணம் போல விருக்கிறதே, என்ன அண்ணு!" என்று சுமார் 7 வயது மதிக்கத்தக்க ஓர் அழகிய பாவை ஆவலுடன் தன் சகோதரனைக் கொஞ்சலாயும் ஸ்வாதந்தர்யத்துடனும் கேட்டாள்.

அதைக் கேட்ட சிறுவனின் முகம் சற்று மாறுதலடைந்து, விசனத்தின் திரையால் மறைக்கப்பட்டவன் போலாய்விட்டான் கண்கள் சோகக் குளம் போலாயின. முகத்தை வேறு புறம் தி பிக்கொண்டு தன் மாறுதலை மறைத்துக்கொள்ளப் பிரயாசைப் வதின் ரகஸியமறியாத சிறுமி ஒரு மாதிரியான தவிப்புடன் ணனின் இடுப்பில் தன் கையைச் சுற்றிக்கொண்டு " அண்ண

பேசவில்லை? ஏன் முகத்தைத் திருப்பிக்கொண்டாய்? இதோ ரு...ஆ...அதோ...கிருஷ்ணன் வேஷம் போட்டுக்கொண்டு ஒரு பண் வருகிறாள்...ஆ...வெகு அழகா யிருக்கிறதே...எதற்காக அண்ணா இவர்கள் இப்படி வேஷம் போட்டுக்கொள்கிறார்கள்?... என்று கேட்டுக்கொண்டே குழந்தைகளின் இயற்கையான விளை யாட்டுக் குணப்படிக்கு வீதியில் சென்ற பெண்களையே வெகு அதி சயமாகக் கவனித்தாள்.

நந்தகுமார் என்கிற அச் சிறுவன் தனது மாறுதல்களைச் சற்று அடக்கிக்கொண்டு தன்னருமைச் சகோதரியைக் கட்டி யணைத்தபடியே "கண்மணி ப்ரபாவதீ! இன்று முதல் நவராத்திரிக் கோலு ஆரம்பம். அதற்காக பெண்களெல்லாம் அலங்காரம் செய்து கொண்டு ஊரழைக்கிறார்கள்." என்றான்.

ப்ரபா:—ஏன் அண்ணா! கொலுவுன்னா என்ன? அது எல்லார் வீட்டிலுமா நடக்கும்? நம்ம வீட்டில் ஏன் கொலு பண்ணல்லே?...

இக்கேள்வி நந்தகுமாரின் இதயத்தைத் தாக்கியது. சகிக் கக் கூடாத வேதனை உண்டாகிவிட்டதை சமாளித்துக்கொண்டு "ப்ரபா! கொலு என்றால் அது ஒரு பண்டிகை. முக்யமாக பூஜை செய்வதுதான் கொலுவின் தத்துவம். பொம்மைகள் நிறைய வாங்கி படிக்கட்டுகள் கட்டிவைத்து தினம் பூஜை செய்து, பாட்டு பாடி எல் லோருக்கும் மஞ்சள் குங்குமம், வெத்திலே பாக்கு, சுண்டல் எல்லாம் கொடுப்பார்கள். இதை சிலர் வீட்டில் செய்வார்கள்; சிலர் வீட்டில் செய்யமாட்டார்கள். நம் வீட்டில் செய்யும் வழக்கமில்லை; ஆத லால் செய்யவில்லை" என்று கூறி முடிப்பதற்குள், "என்ன! என்ன! பொம்மை வைத்துப் பாடுவார்களா!...அண்ணா! நான்கூட கொலுவு பாக்கணும். என்னை அழைத்துக் கொண்டு போ...வா! வா!... அண்ணா!" என்று நந்தகுமாரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வீதியில் ஓடினாள்.

சிறுமியின் ஆவலையும் தடுக்க முடியவில்லை; தானும் கூடச் லவும் முடியவில்லை. மனத்திலோ சொல்லவறியாத வேதனை து. என்ன செய்வான் பாவம்! "அம்மா! ப்ரபா! அவர்கள்

வீட்டில் உன்னைக் கூப்பிடாமலிருக்கையில் உனக்கு அவர்கள் வீட்டில் வேலை என்ன?...நீ போகவேண்டாம்''...என்று கூறுவதற்கு முன் ப்ரபா நந்தகுமாரின் கையைத் திமிறிக்கொண்டு, சிறு வயதின் களங்கமற்ற துள்ளிக் குதிப்புடன் புள்ளிமான் போல ஓடி, நான்காம் வீட்டிற்குள்; நுழைந்தாள்.

ஆகா ! அவ் வீட்டில் கொலு வைத்திருக்கும் வைபவத்தின் அழகைக் கூறியே முடியாது. விதவிதமான புதிய பொம்மைகளின் ஜோடிப்பும், ஓர் கிராமமே தனித்து சிருஷ்டி செய்துவிட்டது போன்ற வல வலமான அமைப்பும், ரயில் மலையைக் குடைந்து கொண்டு ஓடுவது போன்றும், திருப்பதி மலையும், ஸ்ரீ வெங்கடாசலபதியின் கோயிலும், ப்ரார்த்தனை செலுத்தச் செல்லும் பக்த கோஷ்டிகளும் அமைத்து காண்போர் மனத்தைக் கவரச் செய்யும் வண்ணம் வைத்திருக்கும் கொலுவைப் பார்த்த ப்ரபாவின் சந்தோஷமும், ஆநந்தமும், மன எழுச்சியும் அபாரமாய்ப் பொங்கிவிட்டன. வாயைப் பிளந்தபடியே கண்ணைக் கொட்டாமல் அந்த அற்புதமான கொலு வைபவத்தையும் மின்சார விளக்குகளின் அழகையும் பார்த்துக்கொண்டே தம்பித்து நின்ருள்.

அச் சமயம் அங்கிருந்த சிறுமி யொருத்தி "ஏண்டீ! உங்க வீட்டில் கொலு வைக்கலையா?'' என்ருள். இக் கேள்வி ப்ரபாவின் மனத்தில் சுறுக்கெனப் பட்டது. ''இல்லை'' என்று தலையை மட்டும் ஆட்டிவிட்டுக் கொலுவையே பார்த்துக் கொண்டிருந்தாள். மீண்டும் அச் சிறுமி "ஏண்டி வைக்கல்லே? இன்னிக்கிதானே ஆரம்பம். வைக்கச் சொல்லேன். ஓங்காத்துலெ பொம்மை இல்லையா!'' என்று கேட்டாள்.

அப்போது உள்ளே இருந்து வந்த ஒரு பெரிய அம்மா, ப்ரபாவை உற்றுப் பார்த்துவிட்டு, தன் பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்துத் தள்ளி " சீச்சி! கழுதை! இந்த பெண்ணை யார் உன்னைக் கூப்பிடச் சொன்னது? தடிப் பிணமே! இவளோடா பேசிக் கொண்டிருக்கிருய்? புத்தி கெட்ட நாயே! போ; பக்கத்து தெருவிலே இ-கும் (தேவரடியாள்) தேவடியாப் பெண் ஜீவரத்தினத்-அழைத்து வா; ஜோடியா இருக்கும். மூதேவி!'' என்று

தைப் பார்த்ததும், ப்ரபா அப்படியே இடி விழுந்து, மிரள மிரள விழித்தபடியே நடுக்கலுற்று நின்றாள்.

இதற்குள் அச்சிறமி "இல்லேம்மா! நானு இவளைப் போய்க் கூப்படவே இல்லெ. இவளாவே ஓடி வந்தாம்மா! இவளேயே கேளேன். ...நான் ஒன்னெக் கூட்டேனடீ! எண்டீ நீ இங்கே வந்தே?" என்று அலக்ஷியமாயும், அதட்டியுங் கேட்டாள்.

ப்ரபாவின் கண்கள் சிறு குளம் போலாகிவிட்டன. மார்பு படபடத்து துக்கத்தால் பெருமூச்சு சொக்காயைக் கிழித்துக்கொண்டு வருவதுபோல விம்மல் தொண்டையைத் துரத்திக்கொண்டு வந்தது. அந்த கேவலுடன் தாழ்ந்த குரலில் "மாமீ! என்னை கமலா கூப்பிடவில்லை. நானே கொலு பார்க்க வந்தேன். எனக்கு வெத்திலை பாக்கு வேண்டாம். இதோ போய்விடுகிறேன். நான் ஒன்னும் தொடல்லே." என்று கூறிக்கொண்டே கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

இதற்குள் பெரியவள் "சீச்சீ! அல்பமே! உனக்கு வெத்திலை பாக்கு கொடுக்க யாரோ காத்திருக்கிறார்கள் பாவம்! பரிசுத்தவதியின் பெண்ணோன்னோ! உனக்குக் கொடுத்தால் புண்ணியமும் புருஷார்த்தமும் உண்டாகும். போடீ வாயாடீ! தாயைப் போலத்தானே மகளும் இருக்கும். இனி இங்கே வராதே; கெட்டுப் போனவளே! ஓடிப்போ!" என்று அதட்டினாள்.

இதற்குமேல் ப்ரபாவால் தாங்க முடியவில்லை. கோவெனக் கதறியவாறு தேகம் நடுங்கியபடியே ஓட்டமாக வந்து வீதியில் நின்றிருந்த நந்தகுமாரைக் கட்டிக்கொண்டு 'அண்ணா! அண்ணா!' என்று மேலே சொல்லமாட்டாது, தேம்பித் தேம்பிப் புலம்பினாள்.

நந்தகுமாருக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. "ஏனம்மா கண்ணூ! ப்ரபா! ஏன் இப்படிப் புலம்புகிறாய்? அங்கே என்ன சொன்னார்கள்? என்னிடம் சொல்லு." என்று அவளை அணைத்துக் கொண்டபடியே கேட்டான்.

ப்ரபா:—(விக்கி விக்கி அழுதபடியே) அண்ணா!...அ...வா...த்லே...என்று கூறுகிறாள்; மேலே புலம்பல் பேசவிடவில்லை. நந்த[...]ர் அவளை சற்று தேற்றி, சமாளிக்கச் செய்து பின்னர் கேட்ட[...] அண்ணா! என்னை அவாத்தில் வெறுத்துப் பேசி இந்த

பெண்ணை ஏன் அழைத்தாய் என்று தன் மகளைத் திட்டியதோடு 'அடுத்த தெருவு தேவடியாப்பெண்ணையுங்கூட கூப்பிடு; சரியாயிருக்கும்.' என்று திட்டினு அண்ணு! நானும் தேவடியாப் பெண்ணும் ஒன்ணுண்ணு! என்னைப் பள்ளிக்கூடத்திலும் இப்படிதான் அலக்ஷியம் செய்கிறுர்கள். அங்கேயும் அப்படி ஏன் சொன்னுர்கள்? நமக்கென்ன அண்ணு இழிவு?...என்று மீண்டும் அழுதவாறு அவனைக் கட்டிக்கொண்டாள்.

நந்தகுமாரின் மனம் புழுங்கியது. அவன் கண்கள் நீர் முத்துக்களை ப்ரபாவின் சிரசில் உதிர்த்தன. உலகமறியாச் சிறுமிக்கு என்னவிதமான பதில் கூறுவதென்று ஏங்கியது. நிமிட நேரம் தத்தளித்தபடியே நின்றுன். பிறகு ப்ரபாவின் கண்ணைத் துடைத்து அவள் தலையைக் கோதியபடியே "கண்மணீ! ப்பா! அழாதே. நான் அப்போதே சொன்னேனே! நீ ஏன் அவர்கள் வீட்டிற்குப் போனுய்? இதோ பாரு; அழாதே!" என்று தேற்றினுன்.

ப்ரபா கண்களைத் துடைத்துக்கொண்டே, "அண்ணு! நம் வீட்டில் கொலுவு இருந்தால் நான் அவா வீட்டிற்குப் போக மாட்டேனில்லையா!...அண்ணு! எனக்குக் கொலு வைத்துக் கொடுக்கிருயா!...அவாத்திலே...அவாத்திலே...கொலு...என்று மீண்டும் அச் சம்பவத்தை நினைத்துக்கொண்டு அழக் கிளம்பிவிட்டாள்.

ப்ரபாவின் தேகம் குலுங்கி ஸ்வாஸம் பெரியதாகத் தூரத்திக் கொண்டு வரும் கண்ராவியை நந்தகுமாரனுல் கண்டு சகிக்க முடியவில்லை. "இப்படியும் ஒரு சாபம் உலகமறியாத சிறுவர்களாகிய எங்கள் தலையில் விழுமா! ஈசா!" என்று கண்ணீர் உதிர்த்தபடியே ப்ரபாவைத் தட்டிக் கொடுத்து அணைத்துக்கொண்ட சமயம் வீதியில் கைவண்டி யொன்றில் நிறைய பொம்மைகளை வைத்துக் கொண்டு "எது எடுத்தாலும் ஒரணு! எது எடுத்தாலும் ஒரணு!!" வென்று கூவியவாறு மணியடித்துக்கொண்டே ஒரு வியாபாரி வந்தான்.

ப்ரபாவின் இத்தனை விசனத்திலும், புலம்பலிலும் இந்த மணி யோசையைக் கேட்டதும் சிறு பிராயத்தின் விளையாட்டுச் சக்தி குபீரென உண்டாகியவளாய்க் கேவியபடியே...அண்ணு! அதோ பொம்மை!...எனக்கு...வா...ங்கி...த்தா...என்று ஒருவிதமான துடிப்பும், ஆவலுங் கலந்த நிலைமையில் மாறுதலடைந்து கேட்டாள்.

நந்தகுமார் எப்படியாவது இவள் சமாதானமடைந்து போதுமென்று எண்ணி உடனே பொம்மைக்காரனை அழைத்த அவன் வீட்டு வாசலில் வந்து நின்றதும் இத்தனை நேரம் தே இழந்து கலங்கி, சிவந்து சுருங்கி இருந்த ப்ரபாவின் கண்களி

யாச்சரியமான புதிய சோபையும் ப்ரகாசமும் ஒன்று கூடி மலர்ந்ததைக் காண நந்தகுமாரனின் உள்ளமும் அவனை மீறிய ஆநந்தப் பரவச மெய்தியது.

ப்ரபா எந்தெந்த பொம்மைகள் வேண்டுமென்று தானே பொறுக்கிக்கொள்ளுகிறளோ அத்தனையும் எடுத்துக்கொள்ளட்டுமென்று அவளுக்கே பூர்ண சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டான். ப்ரபாவும் ஒவ்வொரு பொம்மையாகப் பொறுக்கி "அண்ணு! இதோ பாரு! மானு...இதோ கிளி! இதோ ஒடம்!" என்று அபரிமிதமான சந்தோஷத்துடன் கூறிக்கொண்டே பொம்மைகளை எல்லாம் எடுத்துக்கொண்டாள்.



நந்தகுமார் ப்ரபாவின் ஆநந்தத்தைக் கண்டு பொங்கிப் பூரித்த வாறு "ப்ரபா! போதுமா! இன்னும் வேண்டுமா! இன்னும் வேண்டுமா யின் எடுத்துக்கொள்ளு" என்றான். ப்ரபா அடங்காத களிப்புடன் "அண்ணா! இது போதும். மண்ணு பொம்மை வேறு வாங்கித் தருகிறாயா?" என்று கொஞ்சிக் கேட்டாள். நந்தகுமார் அந்த பொம்மைக்காரனுக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு "கண்ணா! ப்ரபா! இதை உள்ளே வைத்து விட்டு வா! இன்னும் உனக்கு வாங் கித் தருகிறேன்." என்றான்.

ப்ரபா வெகு சந்தோஷத்துடன் உள்ளே சென்று பொம்மை களை வைத்து விட்டு வேலைக்காரக் கிழவியை நோக்கி "தாயீ! இவை களை பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளு. நான் வேறு பொம்மைகள் வாங்கி வருகிறேன்" என்று கூறி ஓட்டமாக ஓடிவந்து நந்தகுமாரின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு குதி குதித்தாள். அன்றலர்ந்த தாமரையைப்போல் ப்ரபாவின் முகம் ப்ரகாசித்தது.

அவ்வூரிலுள்ள கோயில் கோபுர வாசலிலிருக்கும் பொம்மைக் கடைக்கு அழைத்துச் சென்று முக்கியமான ஸ்வாமியின் பொம்மைகள், லக்ஷ்மி, பார்வதி, ஸரஸ்வதி முதலிய பெண் தெய்வங் களின் பொம்மைகள், இன்னும் சில தனி பொம்மைகள் முதலியவை களை மிக்க உத்ஸாகத்துடனும் சுறு சுறுப்புடனும் பொறுக்கி எடுத்துக்கொண்டு "அண்ணா! இந்த மட்டும் போதும். இவைகள் தான் நன்றாக இருக்கின்றன" என்றாள்.

நந்தகுமார் மொத்தம் கணக்கு பார்த்தபொழுது 5 ரூபாயும் சில்லறையும் ஆகிவிட்டதை யறிந்து சற்று தியங்கினான். அன்று மறுதினம் தனக்கு சம்பளங் கொடுக்கவேண்டிய பணந்தான் இவன் கையிலிருந்தது. அதில் ஒரு ரூபாயும் சில்லறையும் முதலில் வாங்கிய பொம்மைகளுக்குக் கொடுத்துவிட்டான். 3 ரூபாயும் சில்லறையுந் தான் கையிலிருந்தது...இன்னும் வீட்டு சாமான் செலவுக்காக வைத் திருந்த பணம் 2 ரூபாய் இருந்தது. இவைகளைக் கொடுத்து பொம்மை வாங்கிவிட்டால் சம்பளங் கட்டுவதற்கு என்ன செய்வது? சாமான்கள் வாங்க என்ன செய்வது? அந்த பங்காளி மனிதன்

கொடுக்கமாட்டானே!'' என்ற பெரிய குழப்பமும் யோசனையும் தோன்றிவிட்டதால் சற்று வேதனையுடன் நின்றான்.

மகா யூகசாலியும், சூக்ஷ்ம புத்தியுமுடைய ப்ரபா தன் அண்ணனின் முகத்தைப் பார்க்கிறாள்; பொம்மைகளைப் பார்க்கிறாள். பணம் நிறைய ஆய்விட்டதால் அண்ணன் வருத்தப்படுவதாக நிமிடத்தில் அறிந்து கொண்டாள். பொம்மைகளை விடவும் மனமில்லை. என்ன செய்வாள் பாவம். நந்தகுமாரனே, இவைகளை வேண்டாமென்றால் ப்ரபாவின் விசனமதிகரிக்கும். என்ன செய்வது என்று தியங்குகையில் ப்ரபா மிக்க புத்திசாலித்தனத்துடன் சில பெரிய பொம்மைகளை எல்லாம் அண்ணன் முகத்தைப் பார்த்தபடியே எடுத்துத் தூர வைத்துவிட்டு "அண்ணா! இந்த பெரிய பொம்மைகளெல்லாம் எனக்கு வேண்டாமண்ணா! நான் பெரியவளான பிறகு வாங்கலாம். சின்ன பொம்மை போதும். எடுத்துக்கொண்டு போகவும் சௌகரியமா யிருக்கும்.'' என்று தந்திரமாகக் கூறினாள்.

இத்தனை சிறிய பாலகியின் அபாரமான அறிவைக் கண்டு நந்தகுமார் தனக்குள் பூரித்தபடியே ப்ரபாவைத் தட்டிக் கொடுத்துவிட்டு பொம்மைகளின் கணக்குப்படிக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு தான் கொஞ்சமும், ப்ரபா கொஞ்சமுமாக பொம்மைகளை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்கள்.

ப்ரபா அடங்காத ஆநந்தத்துடன் "அண்ணா! எனக்குப் படிகள் கட்டிக்கொடு. கொலு வைத்துக் கொடு''. என்றாள். உடனே நந்தகுமார் சில தகர டின்கள், பிப்பாய்கள் இவைகளை இருபுறமும் நிறுத்தி அவற்றின்மேல் பலகைகளைப் போட்டு சின்னதாக மூன்று படிகள் கட்டி ஒரு வெளுப்பு துப்பட்டியை அதன்மேல் விரித்து, பொம்மைகளை இருவருமாக எடுத்து வைத்தார்கள். ப்ரபாவுக்கு சற்று முன்னிருந்த தாங்கமாட்டாத துக்கம் முற்றிலும் மறைந்து போய் சந்தோஷ பிம்பமாய் மாறி, பொம்மைகளை எடுத்து வைத்துவிட்டு ஒரு சிறிய தட்டில் வெத்திலை பாக்கு, மஞ்சள், புஷ்பம் இவைகளை வைத்தாள். மற்றொரு தட்டில் ஆலத்தி கரைத்து வைத்தாள். கோலமிட்டு குத்துவிளக்கேற்றினாள்.

புதுப் பாவாடை எடுத்து உடுத்திக் கொண்டாள். "தாயீ! ச்வாமிக்கு கொஞ்சம் சுண்டல் செய்து கொடு" என்று கூறிவிட்டு கொலுவுக்கு முன்னால் வந்து உட்கார்ந்தாள். வேறு யாருமில்லாதது மிக்க குறையாக ப்ரபாவுக்குத் தோன்றியதால் தன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சில ஏழைப் பெண்களின் ஞாபகம் வந்தது. அவர்களை அழைத்து வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியதால் தாயை துணை அழைத்துக்கொண்டு குங்குமச் சிமிழுடன் வெகு சந்தோஷமாகப் புறப்பட்டு சில தெருக்களில் உள்ள பெண்களை அழைத்தாள். அப் பெண்களில் சிலர் சந்தோஷத்துடன், கூடவே வந்துவிட்டார்கள்.

ப்ரபா கொலுவுக்கு அவர்களைப் பாடச்சொன்னாள். உடனே சில பெண்கள் பாடினார்கள். ப்ரபாவும் பாடினாள். "அடீ! நாம் கும்மி யடிப்போம் வாங்கடீ!" என்று ஒரு பெண் கூறினாள். ப்ரபா அதை ஆமோதித்து உடனே பாட்டுப் பாடிக்கொண்டே கும்மியின் வரிசைப்படிக்கு வளைந்து வளைந்து வெகு சந்தோஷத்துடன் கும்மி யடிக்க வாரம்பித்தார்கள்.

இவைகளை தூர விருந்து பார்த்தபடியே நந்தகுமார் ஆநந்தப் பூரிதமடைந்தான். தன் தங்கையின் சந்தோஷமான நிலைமையே தனது சந்தோஷமாக எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கையில் வீதியிலிருந்து "அடீ பங்கஜம்!...அடீ சிவபாக்யம்! அடி பார்வதீ!... என்று ஏக காலத்தில் நாலைந்து குரல்கள் கடுமையான ஆத்திரத்தைக் காட்டும் தொனியில் கேட்டதும், நந்தகுமார் தியங்கினான்.

அக் குரல்களைக் கேட்ட மற்ற பெண்கள் "ஆ! அதோ! எங்கப்பா வந்து கூப்பிடுகிறார்கள்." என்று கூறிக்கொண்டே வாசலுக்கு ஓடினார்கள். வீதியில் நின்றிருந்தவர்கள், தம் தம் பெண்களின் தாடையையும், தலை மயிரையும், கையையும், காதையும், கழுத்துப் பின்புறத்தையும் முறையே அபாரமான ஆத்திரத்துடன் பிடித்துக்கொண்டு "தடிப் பிணங்களா! எங்கே போனீர்களோ என்று எண்ணி இருந்தோம். இந்த கெட்டுப்போனவள் வீட்டிற்கா— ப்ரஷ்டம் செயப்பட்டுள்ளவர்களின் வீட்டிற்கா—வந்து கும்மி யடிக்

கிறீர்கள்? சீச்சீ! தறிதலையே! இந்த நாடோடிப் பெண்ணோடு சேர வேண்டாமென்று எத்தனையோ தரம் கூறவில்லையா? அதை மறந்து குதிக்கிறாயே! ஓடிவிட்டவளின் மகளுடன் சேர்ந்து நீயும் தேவடியாளாகிவிட்டால் உன்னை எந்த நாயடீ வந்து கட்டித் தொலைப்பான்? உன்னை வைத்துக்கொண்டு யாரடீ மாரடிக்கிறது? மூதேவிகளே! இந்த வீட்டு லக்ஷணத்திற்கு கொலுவு ஒரு கேடா? சீச்சீ! நடவுங்கள்.'' என்று கண்டபடி திட்டியவாறு அவரவர்களின் பெண்களை இழுத்துக்கொண்டு போகையில், ப்ரபாவை நோக்கி, "ஏ பொண்ணே! இனிமேல் எங்கள் வீட்டுக்கு வந்தால் காலை உடைத்துவிடுவோம். ஜாக்ரதை.'' என்று கூறியவண்ணம் சென்றுவிட்டார்கள்.

அந்தோ! விசனத்தை மறந்து வேடிக்கையி லீடுபட்டுத் தன்னிறையழிந்த ஆனந்தக் களியாட்டத்தில் மூழ்கியிருந்த ப்ரபாவுக்கு திடீரென்று புலியின் வாயில் தூக்கி எறிந்தது போலான மன அதிர்ச்சியும், திடுக்கிடலும், தாங்கமாட்டாத விசனமும் பொங்கிவிட்டன. மாலையில் உண்டாகிய வேதனையை விட அதிகரித்த வேதனையுடன் அண்ணா வென்று அலறியபடியே ஓடி, புழு போலத் துள்ளியவாறு நந்தகுமாரனின்மீது தபாரென்று சாய்ந்தாள். விளையாட்டின் மத்தியில் வெம்புலி பாய்ந்தது போல ஒரு வினாடியில் மாறிவிட்டது. என்னே சமூகத்தின் தண்டனை! என்னே உலகம்!

அனாதைப் பெண்

அல்லது

கனிந்த காதலர்

அனுபவம் நிறைந்த ஆச்சரிய சம்பவங்களும்
இணையிலாக் காதலும், ஈடிலாப் பக்தியும்
ஒருங்கே அமையப் பெற்று, உயரிய படக்காட்சிக்கு
உகந்த சிறந்த நாவல்

சந்தா நேயர்கட்கு ரூ. 1 விலை ரூ. 1-4

2-வது அதிகாரம்

அந்திய காலம்—அலறிடும் கோலம்

உலகமறியாச் சிறுமியும், தம் விசனத்தைச் சிறிது நன்கு உணர்ந்த சிறுவனும் ஒரு கிழவியின் துணையில், பாதுகாப்பில் தனித்திருப்பது மிக்க வியப்பாகத் தோன்றுமல்லவா! இச் சிறுவர்களின் பிறவிச் சரிதையை அறிந்த எவர் மனமும் தவித்துருகாமலும், கண்ணீர் சொட்டு சிந்தாமலும் இருக்க முடியாது.

இச் சிறுவர்களின் பிதாவாகிய நரஸிம்மன் என்பவர் ஒரு சாதாரண உத்யோகஸ்தர். மாதம் 200 ரூபாய் வருமானம் பெறுவதுடன் ஏற்கெனவே உள்ள பிதுரார்ஜித சொத்துடன் சுகமாய் காலக்ஷேபம் செய்துவந்தார். லக்ஷ்மி என்கிற அவருடைய மனைவி நிழல் போல விருந்து இன்பமாக இல்லரசு புரிந்து வந்தாள் எனினும், லக்ஷ்மி என்ற பெயருக்கு ஏற்றதுபோல அவளுக்கு சாக்ஷாத் லக்ஷ்மியின் எழில் அப்படியே அபாரமாய் அமைந்திருந்ததால் அந்த அழகில் தானே மயங்கி, அவ்வழகு தனக்கு ஓர் பெரும் சத்ரு என்பதை யறியாது, அதற்கோர் மதிப்பும் பீடமும் கொடுத்து அழகுக்கு அழகு செய்வது போல அலங்காரங்கள் செய்துகொண்டு மிக்க ஆடம்பரமாயும், அழகுப் பதுமையாயும் விளங்குவாள்.

லக்ஷ்மியின் அபாரமான அழகில் ஈடுபட்டு மயங்காத வாலிபர்களே, ஏன் கிழவர்களும், இல்லை என்றால் மேலே கூறவேண்டுவதே இல்லை. பெண்மணிகள் கூட அம் மடந்தையைக் கண்டால் தடை கட்டிய நாகம் போல நின்று இமை கொட்டாது பார்த்து மகிழும் போது, ஆடவர்களைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதே இல்லை.

லக்ஷ்மியின் அழகையும், அவள் குடும்பத்தின் உயர்வையும் கண்டு மதிமயங்கித் தான் லக்ஷ்மியை மணந்துகொண்டு நரஸிம்மன் மிக்க ஆநந்தமாய் வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். லக்ஷ்மிக்கு சுயேச்சையும், எல்லோரையும் எளிதில் நம்பிவிடும் பேதமைக் குணமும், கபடமறியாது யாருடன் வேண்டுமாயினும் பழகுவதும், பேசுவதும் சுபாவமாக எண்ணினளே யன்றி அதை யோர் குற்றமாக எண்ணுது நடந்து வருவது மட்டும் அவள் கணவனுக்குச் சற்று பிடிக்காம லிருந்தது.

லக்ஷ்மியை நயத்திலேயே கண்டிப்பாரே யன்றி உரத்துப் பேசினல் அவள் மனம் எங்கே புண்பட்டுக் கோபம் வந்துவிடுமோ என்று அஞ்சி அவளைச் சந்தோஷிப்பதிலேயே தானும் மகிழ்ந்தார். சில வருடங்களுக்குள்ளாகவே நந்தகுமாரும், பின்னர் ப்ரபாவதியும் முறையே 4 வயது வித்யாசமாகப் பிறந்தார்கள். இரு குழந்தைகளுக்குத் தாயாகிய பெரும் பொறுப்பை லக்ஷ்மிக்கு கடவுள் கொடுத்த பின்னரும் அப் பொறுப்பின் மகிமையறியாது தன் போக்கிலேயே வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

வாழ்க்கையாகிய வானத்தில் திடீரென்று கரு மேகங்களும் இடியும் புயலும் மனிதரறியாமலேயே வந்து குடும்பத்தையும், அன்பையும், சமூகத்தையும், முன்னர் படைத்துள்ள கண்ணியம் கீர்த்தி முதலியவற்றையும் ஒரு விடிையில் அடித்துக்கொண்டு போய்விடும் என்பதை யார் அறியவல்லார்? அம்மாதிரி இருண்ட நிலையில் சிதறுண்ட குடும்பங்கள் எத்தனையோ? வாழ்க்கையின் சித்திரமே மறைபட்ட கொடுமைகள் எத்தனையோ!

லக்ஷ்மியின் குடும்ப வாழ்க்கையின் எல்லை ஒரு வகையில் மேற் சொல்லிய இருண்ட கரு மேகத்துடன் கூடிய பெருங் காற்று மழை போன்ற விதியினல் சிதறுண்டது. எத்தனையோ அருமையான ரோஜா புஷ்பத்திற்கு ஒப்பாகத் தன் காதலியை எண்ணி ரோஜா புஷ்பத்தின்மீது அதிகமான பெருமூச்சு பட்டாலும் வாடிவிடும் என்கிற எண்ணத்துடன் அவளை நடத்தி வந்த நரஸிம்மன் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இன்ப ராணி துர்நடத்தை

யில் ஓடிவிட்டாள் என்ற பெரும் அவமானகரச் சொல்லால் தாக்கப் பட்ட பின்னர் அவரது சப்த நாடியும் ஒடுங்கிப் போய் சகிக்க விய லாத சங்கடத்தை யடைந்து கேவலம் நடைச் சவமாகிவிட்டார் என்று கூறவும் வேண்டுமா?

அவருடைய இதயம் அப்படியே வெடித்து விட்டதென்றே கூறலாம். அந்த அவமானமும் துக்கமும் அவரைத் தலை நிமிர ஒட்டாது செய்துவிட்டதால் உடனே இதயத்தில் தாங்க வியலாத வேதனையும், நோயும் உண்டாகிவிட்டன.

இதன் மத்தியில் ஒரு நாள் லக்ஷ்மி தன் குழந்தைகளைப் பார்க்க சிலமணி நேரம் வீட்டிற்கு வந்த விஷயம் ஊர் முற்றும் தீபோலப் பரவிவிட்டதால், ஓடிவிட்டவளைச் சேர்த்துக்கொண்டான் என்றபுகாரைக் கிளப்பி கட்டுப் போட்டு எல்லோரும்ஜாதி ப்ரஷ்டம் செய்து விட்டார்கள். ஏற்கெனவே உள்ள வேதனையில் இந்த சமூகக் கட்டுப்பாடு அவரை முற்றிலும் கொன்றுவிட்டதென்றே கூறலாம். அவர் பிதாவின் திதிக்கு ஒரு காக்காய்கூட போகக்கூடாதென்று கட்டு செய்துவிட்டதால் அவர் மனமுடைந்து நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் அன்ன தானமும், வஸ்திர தானமும் கொடுத்துத் தன் பிதாவின் ஆன்மா சாந்தியாகிக் களிக் கும்படி கடவுளை வேண்டிக்கொண்டார்.

பிச்சைக்காரர்களைக்கூட போகவிடாது சில வேஷக்காரர்கள் கலைத்துப் பார்த்தார்கள். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்ற பழ மொழிப்படிக்கு வயிறு காய்ந்துபோய் ஒரு வாய்க் கஞ்சிக்குப் பஞ் சாய்ப் பறக்கும் எழைகள் வயிருற உண்டு வாழ்த்திச் சென்ருர்கள். கோயில் குளங்களுக்குக் கூட இவர்களை வரக்கூடாதென்றும் ஒருவ ரும் இவர்களை சாதாரணமாக விசாரிக்கக்கூடப் போகக் கூடாதென் றும் ஆரம்பித்த பிறகே அவருடைய மனது அடியோடு முறிந்து போய், இத்தகைய மனிதர்களின் முகத்திலேயே விழிக்கக் கூடா தென்ற விரக்தியும் வைராக்யமும் பிறந்துவிட்டன. உலகையே வெறுத்தார். வாழ்க்கையும் இருண்டுவிட்ட பின்னர் இனி வேறு என்னதான் வேண்டும்? தற்கொலைக்கும் சில சமயம் துணிந்தார்.

ஆனால் இரண்டு பால்மணம் மாறாத ஜீவன்கள் தம் காலடியில் சுற்றிக் கொண்டிருக்கும் கோரமான பரிதாபத்தை நினைத்து மேற்கூறிய எண்ணத்திலிருந்து விலகிக்கொண்டார்.

உலகமே இருண்டு எங்கும் நிர்மூலமாகிவிட்டது போன்ற தோற்றம் உண்டாகிய நிலைமையில், இருண்ட வானத்தில் மினுக்கு மினுக்கென்று இரு நக்ஷத்திரங்கள் ப்ரகாசிப்பதுபோல 5 வயது நந்தகுமாரும், ஒரு வயதும் நிரம்பப் பெறாத ப்ரபாவதியும் அவர் மனத்தில் தோன்றுவதால் உயிர் ஊசலாடிக்கொண்டாவது நிலைக்க ஏதுவாயிற்று.

லக்ஷ்மியின் ஆசையைப் பூர்த்தி செய்ய தன் பிதுரார்ஜித நிலங்களை விற்று ஒரு சிறிய வீட்டை சொந்தமாக வாங்கினார். அதில் இருவரும் சில காலங்கூட ஒன்றுபட்டு சந்தோஷமாக வாழவில்லை. லக்ஷ்மி இறந்து போயிருந்தால்கூட அவர் மிக்க சந்தோஷத்துடன் இருப்பார். இம்மாதிரியான அவமான மென்கிற நெருப்பை அவர் மீது வீசிவிட்டதால் அவர் கருகிவிட்டார். வெளியில் தலை காட்ட அஞ்சி வீட்டோடு அடைபட்டுச் சில தினங்கள் இருப்பதற்குள் அவர் உயிரும் போய்விடும் போலாகிவிட்டதால் அவர் பலமான சிபார்சின் மூலம் ஒரு மாதத்திற்குள் தனக்கு வெளியூரில் வேலையை மாற்றச்செய்து இரு குழந்தைகளுடனும் பழய வேலைக்காரக் கிழவியுடனும் வெளியூருக்குச் சென்றுவிட்டார்.

ப்ரபாவின் முகத்தையும் நந்தகுமாரின் முகத்தையும் பார்த்துப் புலம்புவதைவிட வேறு வகையே அற்றார். 5 வயதை யடைந்த நந்தகுமாரனுக்கு மட்டும் தாயாரை நன்றாகத் தெரிந்து விட்டதால் அடிக்கடி தன் பிதாவை நோக்கி "அம்மா எங்கேப்பா! நாம் மட்டும் ஏன் இங்கிருக்கிறோம்? அம்மா எப்போ வருவா? நீ அவளை எங்கே அனுப்பி இருக்கே? அவளை அழைச்சுண்டு வாயேன்.'' என்று அடுக்கடுக்காகக் கேள்வியைப் போடுவான்.

எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப்பதைப்போல இக்கேள்விகள் அவருடைய உடைந்த இதயத்தை—புண்ணுயுள்ள இதயத்தை—குத்திக் கிளறுவதுபோல வேதனை செய்யும். அக் காலை அவர்

விடும் பெருமூச்சானது இதயம் வெடித்து விடும்போல விருக்கும். கண்ணீரோ ஆறுய்ப் பெருகும். தாயை நன்கறிந்த பையனுக்கு எந்த விதமான தேறுதல்தான் கூறமுடியும் அல்லது உண்மை ஆபாசத்தைத்தான் அவனறியச் சக்தியுண்டா! இரண்டுங் கெட்ட நிலையில் அவனுக்கு என்னதான் சொல்வது? தாயார் இறந்துவிட்டாள் இனி வரமாட்டாள் என்று தைரியமாய்க் கூறிவிடவே துணிந்து, அங்ஙனமே கூறினர்.

இது கேட்ட நந்தகுமார் "ஓகோ! இது பொய்யி; அம்மா எங்கேயோ ஒரு மாமாவோடே போனு, அப்ரம் வரல்லேயே! செத்து பூட்டா எனக்குத் தெரியாதோ! நம்ப அத்தெ நம்மாத்திலேயே செத்துப்போனுளே அவளெ பாடெலெ வச்சுக் கட்டி மோளம் எல்லாம் அடிச்சித் தூக்கிண்டு போனுளே! நீயும் அழுதயே? அத்தெயெ ஏன் இப்படி தூக்கிண்டு போரான்னு கேட்டேன்; செத்துப்பூட்ட எல்லாரையும் இப்பிடிதான் தூக்குவான்னு அம்மாவே சொன்னுளே! அம்மாவெ அப்படி யாரும் தூக்கிண்டு போகல்லெயே! அவளேதானே போனு! இது பொய்யி, அம்மா வந்து சாதம் போட்டாதான் சாப்பிடுவேன். ப்ரபாவுக்கு ஏன் அம்மா வந்து பால் கொடுக்கல்லே?" என்றெல்லாம் கேட்டு அழக் கிளம்பிவிட்டான்.

இதற்கு மேலும் அவர் என்ன செய்வார் பாவம்! 'அவள் மாமாவுடன் ஊருக்குப் போனபோது சமுத்திரத்தில் விழுந்து செத்துவிட்டதால் பெரிய மீன் விழுங்கிவிட்டது. ஆதலால் அப்படி எடுத்திண்டு போகமுடியல்லே' என்றெல்லாம் சமாதானம் சொல்லித் தேற்றுவதற்குள் அவர் உயிரே பாதி நீங்கிவிட்டது. உலகமே அறியாத ப்ரபாவைப் பற்றிக் கவலேயே இல்லை; போட்டுப்பாலிலும் கிழவியின் பாதுகாப்பிலும் தகப்பனுரின் கண்ணீர் வழிந்த முகத்தின் பரிதாபக் கொஞ்சலிலும் ஒருவாறு வளர்ந்து வந்தாள்.

நரஸிம்மனின் மன வலிமையும் முகப் பொலிவும் குன்றியது. ஏதோ மெஷின் போல் விருந்து வருகையில் ப்ரபாவுக்கு 4 வயதும் நந்தகுமாருக்கு 8 வயதும் ஆயிற்று.

அவருடைய பங்காளி முறையில் தம்பியாகிய ஜகன்னதன் என்றவன் மட்டும் இக் குடும்பம் இங்ஙனம் சிதறுண்டு போய்விட்ட

தைக் கண்டு சற்று மனவருத்தமடைவான்; எனினும் ஜாதிக் கட்டும் சமூக திட்டமும் அவனேயும் பாதித்தன. எப்போதாவது சமயம் நேர்ந்தால் ஒருவருக்கும் தெரியாமல் அவர்களைப் பார்த்து யோக க்ஷேமம் விசாரித்துக் கண்ணீர் வடிப்பான்.

நரஸிம்மனுக்கிருந்த மன வேதனையின் பயனுல் அடிக்கடி இதய நோய் பீடித்து வருத்திக்கொண்டே இருந்தது. திடீர் திடீ ரென்று மயக்கமும், மார் வலியும் வந்துவிடும். அக் காலங்களில் கிழ வியும் இச் சிறு குழந்தைகளும் படும் சங்கடம் கூறத் திறமன்று.

நந்தகுமார் பிதாவின் மயக்கத்தைக் கண்டவுடனே கோவெ னக் கதறிப் புலம்புவான். கிழவியின் மனம் பதறும். தவித்தவாறு குழந்தைகளைத் தேற்றுவாள். இம்மாதிரி நோய் அதிகரித்துவிட்ட தால் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு படுக்கையுடன் படுத்திருந் தார்.

தனது வியாதி அதிகரிக்க அதிகரிக்க மனக் கவலையும், தீராத பெருந் துயரமும் அவரை நன்கு கப்பிக்கொண்டன. உலகமோ! இன்பமோ! துன்பமோ! ஒன்றுமே அறியாத ப்ரபாவின் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் வயிற்றில் சொல்ல முடியாத சங்கடம் வதைக்கின்றது. குழந்தையோ பொம்மையும் சொப்பும் வைத்துக் கொண்டு ஓடி விளையாடுவதும் இடைஇடையே தன் பிதாவினருகில் வந்து அவருக்கு முத்தமிட்டுவிட்டு "அப்பா! அதோ பாரு! நானு புவ்வா (சமயல்) பண்ணிக்கேன். நீ சாப்பிட்றயா!...பொம்மைக்கு கண்ணாலம் பண்ணலாம்பா!...என் பொம்மை சிரிக்குது பாத்தியா! ...என்று கூறிக்கொண்டே தந்தையின் முகத்தைத் தடவிக் கொடுப் பாள். முகத்தோடு முகம் பதிப்பாள். சற்று நேரம் மேலே சாய்ந் திருப்பாள்; மீண்டும் விளையாட்டை எண்ணி ஓடிவிடுவாள்.

இக் குழந்தைகளுக்கு வெளி நாட்டமோ விளையாட்டுக்குத் துணையாக வேறு குழந்தைகளின் நேசமோ ஒன்றுமே கிடையாது. எந்த நேரமும் அண்ணன் தங்கை இருவர் மட்டும் விளையாடுவது, கிழவியோடு பேசி விளையாடுவது; பிதாவுடன் கொஞ்சுவது: இதைத் தவிர வேறு ஒன்றுமே இவர்களுக்குத் தெரியாது.

இவர்கள் இருந்த ஊரும் சாதாராணமான ஊர்; இருந்த தெருவோ ஒரு இடுக்கான சந்து. அங்கு அதிகமான வீடுமில்லை; செல்வவந்தர்களுமில்லை. மற்ற சிறுவர்கள் நாகரிகமும் புத்திசாலித் தனமும் அற்று தெருவில் திரிவதைக் கண்ட நரஸிம்மன் தன் குழந்தைகளுக்குத் தனி வாஸமே போதிய பயனளிக்கும்; அக் குழந்தைகளின் சகவாஸம் வேண்டாம் என்று வைத்துவிட்டார்.

அவ்வூரில் ஒரு மைல் தூரத்தில் பெரிய ஏரி இருக்கிறது. அவ் வேரிக் கரைக்குத் தான் மாலையில் ஜனங்கள் உலாவச் செல்வார்கள். அங்கும் தன்னைத் தெரிந்தவர்கள் யாரேனும் பார்த்தால் தன் விச னத்தைக் கிளப்புவதாயும், அவமானமாயு மிருக்குமென்று அதையும் நரஸிம்மன் வெறுத்தார். எனினும் குழந்தைகளை மட்டும் கிழவியை அழைத்துச் செல்லும்படி சில தினங்களில் அனுப்புவார்.

கிழவியுடன் குழந்தைகள் சென்றால் அங்கு மணலில் இவ்விரு வரும், சந்தோஷமாக ஓடி விளையாடுவார்கள். மற்றவர்களின் பழக் கமே இல்லாததால் நேரே வீட்டிற்கு வந்து விடுவார்கள். தம் குழந்தைகள் எத்தனையோ அருமையாய், எத்தனையோ செல் வாக்குடன் வளர வேண்டிய நாளில் தாயின் கதியறியாது தனித்த வாழ்க்கை வாழ்வது அவர் மனத்தைப் புண்படுத்தியது, இன் னிலைமையில் தான் படுக்கையுடன் விழுந்துவிட்ட துயரத்தை அவரால் சகிக்கவே முடியவில்லை.

"நான் கண் மூடி விட்டால் குழந்தைகளின் கதி யாதாகும்? ஐயோ, கொடுமையே! தாயார் மீதுள்ள அபவாதம் குழந்தைகளை யும் பாழ் படுத்தி நசுக்குவதா ஜாதியின் மகிமை! சமூகத்தின் சட் டம்! ஹா!......என்ன அனியாயம்......என் செல்வங்களின் பிற் கால வாழ்க்கையின் ஒளி எங்கிருக்கிறதோ! அல்லது இதே அந்த காரத்தில்தான் வாழ்க்கை முடிந்து விடுமோ! ஹா! ஈசா! என் னோடு என் குழந்தைகளையும் அனுப்பி விடு. இதையே நான் என்னி தய பூர்வமாய் வேண்டுகிறேன்.

நான் இக்குழந்தைகளை அடையும்போது எத்தனை ஆவலும் ஆநந்தமும் கொண்டேனோ அதேபோல அவர்கள் என்னோடு வந்து

விடுவதையும் நான் ஆசையாய் விரும்புகிறேன். என் ஒரு கட்டை இருக்கையிலேயே கேவலம் பால் மணம் மாருத சிசுக்கள் இந்த கட்டுப்பாடென்கிற தீயினல் வதங்கும்போது இக்கட்டை மறைந்து விட்டால் அத்தீயினல் குழந்தைகள் எரிந்துவிடு மன்ருே?

அந்தோ! லக்ஷ்மீ!...லக்ஷ்மீ!...இப் பரிதாபத்தை, கண்ராவியைக் கண்டு என்னல் சகிக்க முடியவில்லையே! என்னிதய பூர்வமாய்க் காதலித்து மணந்ததன் பலன் இதுவோ...என் செய்வேன்? சிறு தளிர்களாகிய என் செல்வங்கள் கட்டுப்பாடென்ற புசலில் அகப்பட்டு என்ன தவிக்குமோ, எப்படி சீரழியுமோ? எவ்வாறு சிறுமைப் படுமோ......அதை நினைக்கையிலேயே என்னுவி துடிக்கின்றதே. என் செய்வேன்?' என்று தத்தளித்தவாறு இருவரையும் அருகிலழைத்துக் கட்டியணைத்து முகம் பதித்து, விம்மி விம்மி யழுவார்.

சற்று புத்தி தெரிந்த நந்தகுமார் தந்தையின் துயரத்தைக் கண்டு விவரம் முற்றும் தெரியவில்லை எனினும், அடங்காத விசனத்துடன் அழுவான். இவ்விதமே நரஸிம்மனின் வாழ்க்கைச் சகடமும் சுழன்று அதன் முடிவுக்கு வந்து விட்டதை யொருதினம் அறிவிப்பதே போன்று இதய நோய் அதிகமாகி விட்டது. குழந்தைகளின் திக்கற்ற தன்மையின் அலங்கோல ஆட்சியின் உதயமும் அப்போதே ஆகிய தென்று கூற வேண்டுமா!

நரஸிம்மன் அன்றிருந்த நிலைமையில் தனக்கு நெருங்கியுள்ள சாவைத் தெரிந்து கொண்டதும் முன்னிலும் அதிகமான விசனமும் கலக்கமும் உண்டாகிவிட்டன. கிழவியை அருகில் அழைத்தார். "தாயீ! நீ நல்ல அனுபவசாலி யாதலால் என் முடிவையும் தெரிந்து கொண்டிருப்பாய். என் செல்வங்களின் பொறுப்புக்கு நீ தான் இனி கர்த்தா.

தாயீ! நீ தான் தாய். நீ தான் தந்தை. நீ தான் சகலமும். உன் வாழுள் மறையும் வரையில் குழந்தைகளைக் கைவிடாதே. என் கண்மணிகளைக் கைவிடாதே.....பரதேசிகளைக் கைவிடாதே. 'நான் ஆதரிக்கிறேன். சமூகக் கட்டுப் பாட்டில் நான் சேரவில்லை' என்று

எனக்குச் சத்தியம் செய்து கொடுத்து என் ஆன்மாவைச் சாந்தி யடையச் செய். அதோ......குழந்தைகள் இங்கு வந்து விடுவார்கள். என்னருமைக் களஞ்சியங்களைத் தனியே விட்டேன்......தாயீ! நீயும் புலம்பினால் நான் என்ன செய்வேன்? நீதான் எனக்குத் தாயா யிருந்தாய். இனி என் குழந்தைகளுக்கும் தாயாயிருந்து காப் பாற்று.'' என்று கண்ணீர் ஆறாய்ப் பெருகியவாறு தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

தாயின் தேகம் குலுங்குகிறது. விம்மலும் பெருமூச்சும் பெரும் புசல் காற்றுபோல் பீறிட்டுக் கொண்டு வருகிறது. "தம்பீ! நரஸிம்மா! உன்னை வெகு சந்தோஷத்துடன் பெற்றோர் முன் னிலையில் வளர்த்தேன். உன் குழந்தைகளை இந்த கண்ராவி நிலைமை யிலா வளர்க்கப் பாவி நான் முற்பட்டேன்? ஐயோ! தம்பீ! வைத்தி யரைக் கூப்பிடட்டுமா!......ஏன் ஒருவாறு விழிக்கிறாய்?......நான் என் சடலத்தில் ஜீவனிருக்கும் பரியந்தம் குழந்தைகளை என் கண்ணேபோலப் பார்த்துக் கொள்கிறேன். கண்ணீர் விடாதே...... கலங்காதே...

தம்பீ! தம்பீ!......குழந்தைகள் வருகிறார்கள் பாரு...என்று கதறினாள். அதே சமயம் இரு குழந்தைகளும் ஓடி வந்து 'அப்பா! அப்பா!......என் தாயி அழறா......நீயும் அழறே......அப்பா!... இதோ பாரப்பா...அண்ணா என் பொம்மையை ஓடச் சூடுவானும்... என்று ப்ரபாவும், அப்பா! நான் ஓடக்கெல்லேப்பா! ப்ரபா தான் என் பெலூனை ஓடச்சிப்புட்டாப்பா! எனக்கும் ப்ரபாவுக்கும் வேறெ பெலூன் வாங்கித்தாப்பா!'' என்று நந்தகுமாரும் கொஞ்சிச் சொன்னார்கள்.

நரஸிம்மனுக்குப் பேச முடியவில்லை. அவர்களை அணைத் துக் கொண்ட படியே "ஆகட்டும்; வாங்கித் தருகிறேன்'' என்று கையினால் ஜாடை செய்தார். துயரமோ தாங்க முடியவில்லை. தாயி இந்த நிலைமையை அறிந்து கொண்டு ஓட்டமாக ஓடி நாலைந்து பெலூன்களை வாங்கிக்கொண்டு, வரும்போது டாக்டரையும் அழைத்துவந்தாள்.

நரஸிம்மன் பெலூனை தானே வாங்கி இரு குழந்தைகளின் கையிலும் கொடுத்து மீண்டும் கட்டியணைத்து முத்த மிட்டார். பெலூனைப் பார்த்த சந்தோஷத்தில் ஓட்டமாக பெலூனை வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். வைத்தியர் நரஸிம்மனை சோதித்துக் கொண்டிருக்கையில், ஜகன்னாதன் அகஸ்மாத்தாக அங்கு வந்தான். அச்சமயத்தில் ஜகன்னாதனைக் கண்டதும் நரஸிம்மனின் மனத்திற்கோர் ஆறுதலும் ஆநந்தமும் வியப்பும் உண்டாயின. அவனைப் பார்த்து ஜாடையினாலேயே 'வா! உட்காரு'....என்றார்.

ஜகன்னாதனுக்கு இங்குள்ள நிலைமையையும், நரஸிம்மனின் பரிதாபத்தையும் கண்டு மிக்க திடுக்கிடலும் விசனமும் உண்டாகிவிட்டதால் "அண்ணா! என்ன உடம்பு...ஏன் இப்படி மூச்சு விடுகிறாய்... தாயீ!......எத்தனை நாளாக இப்படி இருக்கிறது?...டாக்டர்! ஏன் ஒருமாதிரி விழிக்கிறீர்கள்? உடம்பு எப்படி இருக்கிறது?" என்று அடுக்கடுக்காய் கேட்டபடியே நரஸிம்மனின் கையைப் பிடித்துக் கொண்டான்.

நரஸிம்மன் சற்று திணறியபடியே சோகச் சிரிப்பும், கண்ணீரும் பொங்கப் பேசவாரம்பித்து "ஜகன்னாதா! இது தெரியவில்லையா? என் வாழ்க்கையின் சக்கரம் நிற்கும் சமயம் நெருங்கி விட்டது. இது வைத்தியர் சொல்லித்தானா தெரியவேண்டும்? எனக்கே தெரியும். கடவுள் உன் ஒருவனையாவது இச்சமயத்தில் எனக்கு அனுப்பியதைப் பற்றி மிக்க சந்தோஷப் படுகிறேன். டாக்டர்! இன்று இரவு வரையில் கூட இல்லை என்பதுதானே நீங்கள் சொல்லப் போவது......சரி. மிக்க நலம்......தாயீ! அவருக்குப் பணத்தைக் கொடுத்தனுப்பு......என்று வெடுக்கென்றுரைத்தார்...

டாக்டர் சற்று மனந் தவித்தவாறு "மிஸ்டர்!...எதையும் நாம் உடனே தீர்மானிக்க முடியாது. சில மருந்துகள் ஊசி மூலம் குத்திப் பார்த்தால் மீண்டும் இதயம் சரியாகலாம். நீர் மருந்தை வெறுக்கலாகாது" என்று கூறி ஊசி குத்திவிட்டு, மருந்தும் கொடுத்துவிட்டுப் போகும்போது ஜகன்னாதனையும் கிழவியையும் அழைத்து "வெகு ஜாக்ரதையாய் பார்த்துக் கொள்ளுங்கள். நினைவுகூட மாறிவிடும் போலவிருக்கிறது. ஏதாவது கையெழுத்து வாங்க வேண்டுமாயின்

இப்போதே முடித்து விடலாம்......என்ன செய்வது?'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

இதைக் கேட்ட தாயின் வயிறு பகீரென்றது. டாக்டர் ஏதோ கூறியதை சூக்ஷ்மமாக அறிந்த நரஸிம்மன் "தம்பீ! எனக்கே விஷயம் தெரியும். இதோ! என்னுடைய உயில் முன்னரே எழுதித் தயாராக வைத்திருக்கிறேன். என் குழந்தைகளை ஆகாயம் போட்டது; பூமி ஏந்தியது என்ற நிலைமையில் விட்டுச் செல்கிறேன். இதோ! என் பெயரில் 5000 ரூபாயிக்கு மரணப் பண்டில் கட்டி யிருக்கும் பாலிஸி. அந்த தொகையை என் குழந்தைகளுக்காக உன்னை கார்டியனாக நியமித்துக் கடிதம் எழுதிக் கையொப்பமும் செய்து வைத்திருக்கிறேன். நீ தட்டமாட்டாய் என்ற நம்பிக்கையில் செய்திருக்கிறேன். எனது பாங்கி புத்தகங்களும், மற்ற கடிதங்களும் இதோ இருக்கின்றன.

தம்பீ! பண விஷயத்தில் இவ்வளவுதான் இருக்கிறது. என் குழந்தைகளைக் காப்பாற்றுவாயா! என் கண்மணிகளை ஆதரித்துத் தக்க முறையில் கல்வி பயிலுவித்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வருகிறாயா! என் ப்ரபாவைத் தகுந்த விடத்தில், அவளை அருமையாக வைத்துக் கொள்ளும் வீர வாலிபனுக்கு மணம் செய்து கொடுக்கிறாயா?.......அந்தோ! மறந்தேனே...தம்பீ! அவர்களை இன்னமும் சமூகம் பகிஷ்கரித்து விலக்குமானல் கல்விக் களஞ்சியமாக்கி ஔவையைப் போலும், காரைக்காலம்மையைப் போன்றும் செய்து விடு. என் கண்மணிகளை பாழ்படச் செய்யாதே......என்று படபடத்துக் கூறிக் கொண்டே வருகையில் திடீரென்று சோர்வு பட்டு, மார்பு விம்மி வடியப் பெரிய மூச்சு தரத்த கண்ணை மூடி மவுனியாகி விட்டார்.

"அண்ணு! அண்ணு! நீ கவலைப்படாதே. உன் குழந்தைகளை நான் காப்பாற்றுகிறேன். இதோ! குழந்தைகள் வருகிறார்கள் பாரு'' என்று துக்கம் தொண்டையை அடைத்தவாறு கூறினான். குழந்தைகள் பெலூனை பெரிதாக ஊதி எடுத்துக் கொண்டு "அப்பா! அப்பா! இதோ பாரு! பெலூன்! பெலூன்'!! என்று வெகு சந்தோஷத்துடன் ஓடி வந்தார்கள்.

நந்த குமார் இங்கு ஜகன்னாதன் கண்ணீர் விடுவதையும், தன் பிதா கண் மூடிப் படுத்திருப்பதையும் கண்டு "மாமா! எப்பொ வந்தே? அப்பா தூங்கறாரா...அப்பா! அப்பா!" என்றான். அவர் கண்ணையே திறக்கவில்லை. எனினும் கையினால் குழந்தைகளை அணைத்துக் கட்டி முத்த மிட்டு சடச் சென்று விட்டு விட்டார்.

இன்பம், துன்பம், சாவு, வாழ்வு, நன்மை தீமை இரண்டு மறியாத பச்சிளங்குழந்தைகளுக்கு இங்குள்ள கோரமையின். கொடுமையும், தங்கள் நிலைமையின் சித்திரமும் எங்ஙனம் தெரியும்? தந்தை வழக்கம் போலக் கட்டித் தழுவியதாக எண்ணி மகிழ்ந்தவாறு, அவ்விடத்திலேயே உட்கார்ந்து இருவரும் பெலூனை வாயில் வைத்துப் பெரிதாக ஊதி அது உப்பும் ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டே போட்டியிட்டதில் அவர்களின் பெலூன் டப் என்று உடைந்தது.

அதே நிமிடம் பெலூன் போன்ற நிலையற்ற காயத்தினின்று அடைபட்டிருந்த காற்று போன்ற நரஸிம்மனின் ஆவியும் டப் பென்று வெடித்து பெலூனிலுள்ள காற்றுபோலப் பறந்துவிட்டது. குழந்தைகள் வேறு பெலூனை ஊதிக்கொண்டிருந்தார்கள். கிழவியும் ஜகன்னாதனும் ஹா வென்று அலறினார்கள். ஒரு புறம் குழந்தைகளின் ஆநந்தம்; ஒருபுறம் பெரியவர்களின் பரிதாபம். உலகமே இவ்வளவுதான். மாயா விலாசம்! பம்பர ஆட்டம்! நிலையற்ற நிலைமையை அறிந்தும் மக்களைத் தலைக்கிறக்கு விடுகின்றதா!

பல வருஷங்களாகக் கைவசமில்லாது

இப்போதே வெளிவந்துள்ள இரண்டாம் பதிப்பு

சண்பக விஜயம்

இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப் போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப் பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறது.

எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக் கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். டிம்மி 40-பாரங்களும் அழகிய சித்திரப் படங்களும் கொண்டது. விலை ரூ. 1—12—0.

சந்தா நேயர்களுக்கு ரூ. 1—8—0.

3-வது அதிகாரம்

மெல்லிய பஞ்சே கல்லுருவாயது

நரஸிம்மனின் மறைவும், குழந்தைகளின் பரிதாபமும் ஜகன்னாதனின் மனத்தை மிகவும் பாதித்தன. "கட்டுப்பாடுமாயிற்று; மண்ணாங்கட்டியுமாயிற்று. அனாதைப் பக்ஷிகளைப்போன்ற குழந்தைகளுக்கு ஆதரவு கொடுக்காது நாம் என்ன ஜென்மம் எடுத்தோம்? எது எப்படி வேண்டுமாயினும் ஆகட்டும். நாம் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும்'' என்று தீர்மானித்துக் கொண்ட பிறகு கோரமான துயரத்துடன் சவ அடக்கம் முடிந்தது.

ஜகன்னாதன் குழந்தைகளையும், கிழவியையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்தான். இக்குழந்தைகளைப் பார்த்து எல்லோரும் பரிதாபப் பட்டுக் கண்ணீர் உதிர்க்கிறார்களேயன்றி ஏற்கெனவே உள்ள ஜாதிக்கட்டும், சமூகச் சட்டமும் இவர்களை விட்டு ஒழியவில்லை. "ஐயோ! வீட்டில் கொண்டு வைத்துக்கொண்டால் அது சரியில்லை. கர்மாதிகள் இங்கு செய்யக் கூடாது.'' என்று ஆளுக்கொரு பேச்சை அவுட்டுப் பாணங்கள் போல விட்டார்கள்.

பரதேசிக் குழந்தைகளுக்கு இப் பாதகக் கட்டுப்பாட்டின் கொடுமை எங்ஙனம் தெரியும்? அப்பாவின் மறைவு நந்தகுமாரனைப் பெரிதும் பாதித்துக் கருக்கிவிட்டது. ப்ரபாவுக்கோ விவகாரமே ஒன்றும் புரியாமையினால் அவள் ப்ரமை பிடித்து இயற்கையாயிருக்கும் சுறுசுறுப்பும் விளையாட்டும் அற்று ப்ரகாச மிழந்த கண்களுடன் கிலி பிடித்துக் கிழவியின் மார்போடு மாராகச் சாய்ந்துவிட்டாள்.

ஜகன்னாதனுக்குக் குழந்தைகளின் பரிதாபத்தையும் சகிக்க முடியவில்லை; ஜனங்களின் பேச்சையும் கேட்க முடியவில்லை. சிறிது

நேரம் தியங்கினன். பின்னர் 'எது வரினும் வரட்டும்; இவ் விரு பக்ஷிகள் போன்ற குழந்தைகளைக் காப்பதாகக் கூறிவிட்ட வாக்கை நிறைவேற்றாது விடமாட்டேன்' என்ற சங்கல்பத்துடன், தன் மனைவியை நோக்கி "கோமதீ! உனக்கு நான் வேண்டுமா, வேண்டாமா! நான் வேண்டுமாயின் நம் குழந்தைகளுடன் நீ உடனே கிளம்பு. நாம் இந்த வீட்டில் கும்பலில் இருக்கவேண்டாம். நம்மை அண்டியுள்ள குழந்தைகளின் வீட்டிற்கே போய்விடுவோம்." என்றான்.

கோமதி என்றும் புருஷனிடம் அடங்கா ப்ரியங் கொண்டவளாகையினால் உடனே தன் குழந்தைகளுடன் கிளம்பிவிட்டாள். எல்லோரும் கண்டபடி திட்டினார்கள். அத்தனை பெயரும் வியக்கும்படி ஜகன்னாதன் குழந்தைகளுடன் அவர்கள் வீட்டிற்கே போய் விட்டான். ஜகன்னாதன் குழந்தைகளிடத்தில் உயிராக விருந்து தன் கண்களைப்போலக் காத்து, பக்ஷங் காட்டித் தேற்றத் தலைப்பட்டதால் ப்ரபாவும் நந்தகுமாரும் நாட்கள் செல்லச் செல்ல சிறிது தெம்பை யடைந்து பழைய சோபையைப் பெற வாரம்பித்தார்கள்.

கர்மாதிகள் ஏழைகளின் அன்னதானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டன. ஜகன்னாதையும் அவன் குடும்பத்தையும் சேர்த்து கட்டுப் போட்டுவிட்டார்கள். அக் குழந்தைகளின் பரிதாபத்தில் ஈடுபட்டு மனம் உருகிவிட்ட ஜகன்னாதனுக்கு இது ஓர் ப்ரமாதமாகத் தெரியவில்லை. குழந்தைகளின் மனங் கலங்காது சதா சந்துஷ்டியாக இருக்கும் நினைவிலேயே குழந்தைகளைப் பழக்க வாரம்பித்தான்.

கேவலம் ஓடிவிட்டவள் என்று ஜாதிக் கட்டுப் போட்டிருக்கையில் அவன் அவ் வீட்டுடன் போய்ச் சேர்ந்துவிட்டதால் அவன் உடன்பிறந்த சகோதரர்கள் கடுங்கோபங் கொண்டு உடனே பாகத்தைப் பிரித்து ஜகன்னாதனை ஒதுக்கிவிட்டார்கள். ஜகன்னாதனுக்கு பாகத்தில் ஆஸ்தி என்ற பெயருடன் வந்த தொகையை விட மூன்று பங்கு கடன்தான் பிதிரார்ஜிதமாகக் கிடைத்தது.

ஜகன்னாதன் இதுபரியந்தம் ஏக குடும்பத்தில் இருந்துவிட்டதால் எத்தனை வரவு, செலவு முதலிய யாவும் தெரியாதிருந்தது. இவனுக்குள்ள 30 ரூபாய் சம்பளமும் ஏக குடும்பத்தில் மறைந்து

வந்தது. இப்போது திடீரென்று இத்தனை கடன் தொகையைக் கண்டதும் திடுக்கிட்டுத் தூக்கி வாரிப் போட்டது. 4 குழந்தை குட்டிக்காரன், மூத்த மனைவியின் பெண் ஒன்று விவாகத்திற்குத் தயாராக விருக்கிறது; என்ன செய்வான்! அப்போதுதான் சற்று வ்யாகூலம் தோன்ற வாரம்பித்தது.

இதற்கிடையில் 5–6 மாதங்கள் சென்று மறைந்தன. நரசிம்மனுடைய மரணப் பண்டின் பணமும், ப்ராவிடெண்டு பணம் இன்னும் மற்ற பாங்கி பணங்கள் ஆக மொத்தம் 10 ஆயிரம் ரூபாய்க்கு ரொக்கமாகப் பணம் வந்தது. இத்தனை பெரிய தொகையைக் கண்ட உடனே ஜகன்னாதனின் மனம் வியப்புற்று ப்ரமித்தது. "எத்தனை நாள் கஷ்டப்பட்டுச் சேர்த்தானோ பாவம்! இவைகளை வைத்துக்கொண்டு ஆளும் பாக்ய மற்றுப் பாவி மறைந்தான்" என்று சிறிது விசனமும் உதித்தது.

உலகத்தில் மக்களை உயர்வு படுத்துவதும், தாழ்வு படுத்துவதும், அன்பு ஊட்டுவதும், அனர்த்தங் காட்டுவதும், கீர்த்தி கொடுப்பதும், அபகீர்த்தி அளிப்பதும், குணவானாக்குவதும், அதமனாக்குவதும், நல்வழிப்படச் செய்வதும், தீ வழியில் இழுப்பதும் சகலமும் பணம் செய்யும் கூற்றல்லவா? ஓர் மகா சக்தி வாய்ந்தவனை விட "மந்திரவாதியைவிட, வல்லமை பெற்றது பாரும் பணமல்லவா?

182996.

இன்று பரியந்தம் பரதேசிகளாகிய அக்குழந்தைகளின் மீது உயிராயும், அவர்களின் சொத்துக்கள்மீது பாதுகாக்கும் உத்தம குணமும் நிறைந்திருந்த ஜகன்னாதனுக்கு அந்தப் பெருந் தொகையான பணத்தையும் தனது நிலைமையையும் ஒருவாறு பார்த்த உடனேயே மனம் சற்று மாறத் தொடங்கியது. "இந்தக் குழந்தைகளுக்கும், இத்தனை பணத்திற்கும் தற்சமயம் நாமே அதிகாரி. அச்சிறுவன் பெரியவனாகி மைனர் நீங்கி மேஜர் ஆகி அதிகாரம் பெற்று பிறகு கணக்குக் கேட்கும்போதல்லவா நாம் ஒப்புவிக்க வேண்டும்? அதற்கு இன்னும் குறைந்தது 10 வருட காலத்திற்கு மேலிருக்கிறது.

ஆம்......10 வருடத்தைக் கண்டவர்கள் யார்? அச்சிறுவனை யும் நம்மையுங் கண்டவர்கள் யார்? நாம் கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவதே போல ஏன் கவலைப் பட வேண்டும்? பிறகு பணத்தைக் கொடுத்து விட்டால் போகிறது...... ஏன்......இவர்களின் செலவுக்கும் மற்ற படிப்பு, விவாகம் முத லியவைகளுக்கும் செலவு செய்து விட்டதாக......ஆமாம்......இப் படித்தான் இக்கால தர்மத்திற்குச் செய்யவேண்டும்.

ஹா!......இவ்வெண்ணம் தகுமா? இது மகத்தான கொடிய பாப மல்லவா! பரதேசிக் குழந்தைகளை மோசம் செய்யும் செய்கை யல்லவா!......சீச்சீ......இதென்ன எண்ணம்!....தேனை வழித்தவன் கையை நக்காது விடமாட்டான் என்பது பழமொழி யல்லவா! நான் என்னுடைய பந்து ஜனங்களையும் விட்டு விட்டு, இவர்களுக் காக த்யாகம் செய்ய வில்லையா? இதில் என்ன பிசகு?'' என்று ஜகன் னுதன் குறைந்தது ஒரு மாத காலம் மேற்குறித்த எண்ணங்களாகிய புயல் காற்றுடன் கடும் போராடினுன். கடைசியில் அவனே ஜெயித் தான். எது நினைக்கின்றேமோ அதைச் செய்து முடிக்க வேண்டியது என்ற தத்துவத்திற்கு வந்து விட்டான் அவன்.

இதன் மத்தியில் கடன்காரர்கள் ''வாரண்டு பிறப்பித்து விடு வோம். எங்கள் பணத்தை வைத்தாலாயிற்று; இல்லையேல் அவ மானந்தான்'' என்று சூழ்ந்து கொண்டார்கள். சறுக்கல் உண்டா கியதை யறிந்ததும் கடன்காரர்கள் முற்றிலும் வந்து சுற்றிக் கொள் வது உலக இயல்பல்லவா? ஒரு பாங்கிக்குச் சற்று தளர்வு உண்டா கும் போல விருக்கிறது என்று தெரிந்தால் போதும்; உடனே பணங் கட்டிய அத்தனை பேரும் பணத்திற்காக ஓடி பத்து தினத் திற்குப் பிறகு உண்டாகும் நிலைமையைப் பாங்கிற்கு அன்றே உண் டாக்கி விடுவது கண்ணெதிரில் நடக்கும் விஷயமல்லவா? அது போல கடன்காரர்களின் தொல்லையும்.

கேட்பாரற்று, நாதியற்ற குழந்தைகளின் பணத்தைப்பற்றி உலக மறியாத குழந்தைகளுக்குத்தான் தெரியுமா! அன்றி அன் போடு குழந்தைகளின் பணத்தைக் கணக்கு பார்த்து சண்டை பிடிக்

கத்தக்க தாய் வழியிலோ, தந்தை வழியிலோ கனிகரப்பட்ட மனிதர்களாவது யாரேனும் இருக்கிறார்களா! ஒன்றுமில்லை. பெற்றோரைப் பறி கொடுத்து விட்டு, பிறர் கைச் சோற்றிற்கு ஏங்கி நிற்கும் நிலைமையில் இந்தக் கொடிய வஞ்சகச் சூழ்ச்சியை அப் பால்மணம் மாறாத குழந்தைகள் அறிவது எங்ஙனம்? சொப்பனத்திலும் இல்லையல்லவா?

உத்தம குணமும், உயரிய காருண்ய சிந்தையும், இக்குழந்தைகளுக்காக த்யாகம் செய்யவும் தயாராகி வந்துவிட்ட மனமுமுடைய ஜகன்னாதனின் புத்தியே பெருந் தொகையான பணத்தைக் கண்டதும் முந்திய குணங்கள் எல்லாம் இருந்தவிடம் தெரியாது மறைந்து போய், மோசு எண்ணமும் பேராசையும் உதயமாகி விட்டதென்றால், இனிமேல் உலகத்தின் தன்மையை—பெரியாரின் மொழிகளை—கண்டறிந்த அனுபவங்களையும் கூற வேண்டுமா! இம்மாதிரி ஜகன்னாதனைப்போன்ற மனிதர்களையும் கண்ணாரக் கண்டோம்; காண்கிறோம். கலியின் விந்தையில் இன்னும் காணப்போகிறோம். பரதேசிக் குழந்தைகளைப் போலவும், மேற் சொல்லியபடி தான் காண்கிறோம். உலகம் இவ்வளவுதான்!

ஜகன்னாதனின் கடன்கள் பின்னும் சில மாதத்திலேயே மறைந்து போய் விட்டன. தனக்குக் கிடைத்த பிதிரார்ஜித சொத்துக்களை விற்று அதோடு கொஞ்சம் பணத்தைப்போட்டு ஒரு சிறிய வீட்டைத் தன் மனைவியின் பெயரில் வாங்கி வாடகை மாதம் 25 ரூபாய் நிரந்தர வருமானமாக ஸ்தாபிக்கப்பட்டது. இனி வேண்டியது சாப்பாடும் இட வசதியும். அவ்விரண்டும் பரதேசிக் குழந்தைகளுடன் நடந்து விடுகின்றன. தனிச்செலவு வேறு என்ன இருக்கிறது?

மேற்படி அக்கிரமத்தைக் குழந்தைகள் அறியவும் சக்தியற்றார்களே யன்றி, அன்னைக்கு அன்னையாய் வளர்க்கும் தாயி இதையறியாமலில்லை. இம்மனிதன் ஆரம்பத்திலிருந்ததற்கும் இப்போதிருப்பதற்கும் முற்றிலும் மாறுபட்டு ஆசைப் பேய்க்கு அடிமையாகி விட்டான் என்பதை அவள் நன்கு அறிவாள். அறிந்து ஏழைக் கிழவி எழுத்து வாசனையற்ற கிழவி என்ன செய்வாள் பாவம்! வயி

றெரிந்து கண்ணீர்விட்டுக் கலங்குவாள். குழந்தைகளைப் பார்த்துப் பார்த்துப் புலம்புவாள். வேறென்ன அவளால் முடியும்?

இதைப் பற்றிக் கேட்கவோ கடிந்து சொல்லவோ, மனம் பதறுகிறது. உடனே இத்தகைய மோசம் செய்யும் அநியாயக்காரப் பாவி குழந்தைகளையே எங்கே கொன்று போட்டுவிடுவானோ!...“எங்காவது அவர்கள் உயிருடன் பிழைத்திருந்து பெரியவர்களாகிவிட்டால், பத்து வீட்டில் பிச்சை எடுத்துப் பிழைத்துக் கொள்வார்கள். அவர்களது உயிரிருந்தால் போதும். இப்போது நாம் இதைக் கேட்டால் நம்மை உடனே வீட்டை விட்டு ஓட்டி விடுவான். குழந்தைகளுக்குக் கிடைக்கும் சோற்றிற்கும் பஞ்சமாகி விடும்'' என்ற பெரிய பெரிய யோசனைகளும், குழப்பங்களும் கிழவியின் தளர்ந்த இதயத்தில் போராடுகின்றன. ஆதலால், அவள் எதுவுமே சொல்லவில்லை; செய்யவில்லை. குழந்தைகளைக் கவனிப்பதோடு இருந்து விட்டாள்.

பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிப் படிக்கவைக்க ஏற்பாடு செய்ததால் நந்த குமார் பள்ளிக்கூடம் சென்று விடுவான். வீட்டில் அண்ணன் இல்லாத சமயம் ப்ரபா புழுவெனத் துடித்து அழுவதால் அவளையும் ஒரு சிறிய பள்ளிக்கூடத்திற்குத் தாயி கொண்டு விட்டு அழைத்து வருவாள். இது ப்ரபாவுக்குச் சற்று பொழுது போக்காக விருந்தது. சிறுகச் சிறுக எழுத்துக்களை வெகு புத்திசாலித்தனமாகக் கற்றுக் கொண்டாள்.

ஒரு வருடம் மறைந்தது. ஜகன்னாதனின் பெண்ணுக்கு விவாக காலம் வந்துவிட்டதால், அவன் வரனுக்காக எத்தனையோ பிரயத்தனங்கள் செய்தும் ஜாதிக் கட்டுப் போட்டு விட்டதால் இவன் மகளை மணக்க யாரும் முன் வராததுடன் ஏளனமாக ஏசிப் பேசினார்கள். மனைவியும் இது விஷயத்தில் மிக்க அவமானமும் கோபமும் அடைந்து கணவனிடம் சதா சண்டை பிடித்து வரத் தொடங்கினாள்.

ஏற்கெனவே மாறுபட்டு வேற்றுமையை அடைந்துவிட்ட ஜகன்னாதனுக்குப் பின்னும் வேற்றுமை அதிகரித்துவிட்டது. “நாம்

என் இப்பசங்களுக்காக வீண் அபவாதத்திற்கும், அவமானத்திற்கும் ஆளாக வேண்டும்? நாம் தனியாக விருந்து கார்டியனை நடக்கக் கூடாதா என்ன?'' என்று தனக்குள் பெருத்த குழப்பமும் தீர்மானமும் உண்டாகி விட்டன.

தன் மகளுக்கு விவாகம் செய்யாத அபவாதத்தை நீக்கி, மற்றவர்களுடன் ஒத்து வாழ்வதையே முதல் முதலாக எண்ணி, முற்றிலும் மாறுதலடைந்து, பின் சொந்த மனிதர்களுடன் ஓர் சமாதானம் செய்துகொண்டான். அதுபரியந்தம் இங்கிருந்ததற்காக சேதுவுக்குச் சென்று பிராயச்சித்தம் செய்து கொண்டு வந்தால் சகோதரியின் மகனுக்கே விவாகம் செய்து கொள்வதாக அவர்கள் கூறியதால் ஜகன்னுதன் தாமதமே செய்யாது தாயிடம் வந்து ''தாயீ'! நான் இனி இந்த வீட்டிலிருக்க முடியாது. வீணை அபவாதத்திற்கு நான் ஆளாகி, என் குடும்பம் அதோகதியாகிவிடும் போலிருக்கிறது. ஆகையால், நான் சேதுவுக்குச் சென்று பிராயச்சித்தம் செய்து கொண்டு என் இனத்தாருடன் கூடப் போகிறேன்.

தாயீ! நீதான் குழந்தைகளை ஜாக்ரதையாயும், செட்டாயும் காப்பாற்றவேண்டும். ஊம். என்ன செய்வது? அவர்களின் தலை எழுத்து இது! ரத்தினங்களைப் போலக் குழந்தைகளைப் பெற்று விட்ட பாவி இப்படிச் செய்வாளா? அவள் செய்த பாதகம் குழந்தைகளைத் தாக்குகின்றது. நான் சென்று வருகிறேன். சிக்கனமாகக் குடும்பம் நடத்த வேண்டும். வீண் டாம்பீக வாழ்க்கையே உதவாது'' என்று அம்மனிதன் கூறும்போது தாயின் வயிறு பற்றி எரிந்தது.

''அடப்பாவி! சண்டாளா துரோகி! குழந்தைகளுடன் இருந்தால் ஜாதிக்கட்டுப்பாடும் சட்டமும், நியாயமும்! குழந்தைகளை மோசம் செய்து அந்த பணத்தைத் தின்று ஏப்பம் விட்டுப் பெண்டாட்டி பேரில் வீடும் நகைகளும் வாங்கிப் போட்டிருக்கிறது மட்டும், தீட்டும் அபவாதமும் ஒட்டிக் கொள்ளவில்லையா? அந்தக் குழந்தைகளின் பணத்தால் இது பரியந்தம் தேகம் வளர்ந்ததற்கு மட்டும் பிராயச்சித்தமில்லையா! அட அக்ரமமே! அநியாயக் கொள்ளையே!

இதென்ன கட்டுப்பாடு? இதென்ன வழக்கம்.........எப்படியாவது இப்பாவி தொலைவது எனக்கு மிக்க சந்தோஷந்தான். இவன் அருகிலிருந்தாலே குழந்தைகளுக்கு என்ன ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து நடுங்கினேன். இனி இவன் எப்படியாவது தொலையட்டும்'' என்று தனக்குள் நினைத்தாள்.

அங்ஙனம் நினைத்தபோதே பழைய ஞாபகங்களும் குழந்தைகளின் பரதேசித்தனமும் ஒன்று கூடி, கிழவியின் தேகத்தை நடுக்கி விசனக் கவசத்தில் மறைத்தன. இப்பாதகனுக்கு வாய்திறந்து பதில் பேசவும் அவள் மனம் விரும்பவில்லை! தூர விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளின் மீது அவள் மனம் சென்று லயித்தது. ஊம்.........என்றுமா இவர்கள் உலகை யறியாத நிலைமையில் குழந்தைகளாக விருக்கப்போகிறார்கள். ஒரு காலம் வரும். யானைக்கும் அடிசறுக்கும் என்பது பொய்யாகாது'' என்று தனக்குள் எண்ணியவாறு அவனுடன் பேசாமல் அவனை யொருமாதிரிப் பார்த்து விட்டுத் தலையைத் தொங்க விட்டுக் கொண்டாள்.

ஜகன்னாதனின் இருதயம் கருணை நிறைந்த ஊற்று என்று எண்ணி உயிரை விட்ட நரஸிம்மனுக்கு இப்போது அதே இருதயம் பாலைவனம் போலாகிவிட்டதென்ற செய்தி தெரியுமாயின் உயிர் என்ன துடி துடிக்கும்! எவ்விதம் பதறும்? அந்தோ! இவைகளை நினைக்கையில் தாயின் தேகமே பற்றி எரிவதுபோலாகி விட்டதால், தட தடவென்று குழந்தைகளிருப்பிடம் சென்று விட்டாள். ப்ரபா தாயைக் கண்டதும் ஏதோ பெரும் நிதியைக் கண்டதுபோலத் துள்ளி ஓடி வந்து தாயின் காலைக் கட்டிக் கொண்டாள்.

கல் மனத்தையுடைய ஜகன்னாதன் அன்றே தன் சாமான்களை எல்லாம் அப்புறப்படுத்தி விட்டுச் சற்றும் தயை தாக்ஷிண்யமின்றி, அவ்வீட்டை விட்டுப் போய் விட்டான். நந்தகுமாருக்கு மட்டும் இவன் எங்கேயோ போகிறான் என்பது தெரியுமேயின்றி, வேறொன்றும் தெரியாது. ஜகன்னாதன் சேதுவுக்குச் சென்று குடும்பத்துடன் பிராயச்சித்தம் செய்து கொண்டு வந்துவிட்டான். சில தினங்களுக்கு முன் வரையில் அனாசாரமாகி விலக்கப்பட்டிருந்த

குடும்பம் இப்போது புனர் ஜென்மம் எடுத்துப் புனிதமாகிவிட்ட தாம்! என்னே வேடிக்கை!

ஆசாரம் என்பதும், கட்டுப்பாடு என்பதும் தேகத்திற்கா? மனத்திற்கா? ஐயோ! இக்கொடியவன் செய்துள்ள மோசமும் அக்ருத்யமும், குழந்தைகளை வஞ்சிக்கும் பாதகமும் எந்த சேதுவில் முழுகினுல்தான் தீரும், அல்லது எந்த புண்ணிய பூமியில் புதைத்து வைத்தால் தான் தீரும். வெளி வேஷத்திற்கு பிராயச்சித்தம் செய்து காக்காய்போல முழுகிவிட்டால் ஆய்விட்டதா! ஆத்மா அறியச் செய்துள்ள தீயினுங் கொடிய மோசத்திற்குத் தக்க பிராயச்சித்தம் வேறே இருந்து நியாயந் தீர்க்கும் கடவுள் கூடவா செய்யாது போய் விடுவார்! மனத்தூய்மையும்,—செய்த—செய்யும்—பாபத்தை அறிந்து பரிகாரம் தேடிக் கொள்வதன்றே உண்மையில் பிராயச்சித்தமாகும். சேதுவில் முழுகிவிட்டு, செய்வது முற்றும் பாப காரியமாயிருப்பின் இது வெறுக்கத்தக்க காரியமேயன்றி வேறில்லை. ஊம்......இந்த மாதிரியான வேஷத்தினுல்—ஹம்பக்கினுல்—தான் உலகமும், சமூகமும் கெட்டு விடுவதோடு பாப புண்ணியத்தின் பேதமே இல்லாது போய்விட்டது......ஏ! ஜகன்னுதா! நீ இவ்விளந் தளிர்களாகிய குழந்தைகளை வஞ்சிப்பதை உலகமறியாது வேண்டுமாயின் செய்யலாம். உலகத்தைப் படைத்த ஈசன் கூட அறிய மாட்டான் என்ற அகம்பாவம் மட்டும் கொள்ளாதே!'' என்று பிரதி தினமும் முக்காலும் தாயி எண்ணிக் கண்ணீர் விட்டுக் கலங்குவாள்.

குழந்தைகளின் சந்தோஷத்திலும் அவர்களின் வளர்ச்சியிலுமே நாட்டங்கொண்ட கிழவி, குழந்தைகளின் பாதுகாப்பிற்காக வேனும் தன்னுயுள் இன்னும் வளர்ந்து ஆரோக்யமும் கொடுக்க வேண்டும் என்று கடவுளை வேண்டுவாள். ஜகன்னுதன் பிராயச்சித்தத்திற்குப் பிறகு மகளுக்கு விவாகமாய்விட்டது. மாப்பிள்ளை சம்மந்தி முதலிய வைபவத்தில் இப் பேதைகளை அவன் அடியோடு மறந்தான் என்றே கூறலாம். தாயி சென்று ஒவ்வொன்றுக்கும் தண்டி பணத்தை வாங்கி வரும் நிலைமை ஏற்பட்டது.

அப்போதும், "இத்தனை செலவு எதற்கு? பணம் இப்போதே பாதியாகிவிட்டது ஜாக்ரதை'' என்று அதட்டல்வேறு போடுவான்.

இந்தத் தர்பாரில் பின்னும் சில வருடங்களாயின. இத்தகைய பரிதாபகரமான நிலைமையில் வெளி விஷயங்களோ, கொலுவு முதலிய கேளிக்கையான பண்டிகை சமாச்சாரங்களோ ப்ரபாவுக்கு என்ன தெரியும்? அவளும் நந்தகுமாரும் விளையாடுவதையும், பள்ளிக்கூடத்திற்குப் போவதையும் தவிர வேறு ஒன்றுமே அறியமாட்டார்கள்.

இவ் விரு குழந்தைகளையும் தாயி என்றைக்காவது பீச்சுக்கு அழைத்துச் செல்வாள். அங்கு பீச்சையும் அங்குள்ள மற்ற விநோதங்களையும் தங்களைப்போன்ற சிறுவர்கள், சிறுமிகள் விளையாடுவதையும், சுயேச்சையாக ஆநந்தமாய் ஒடியாடுவதையும் பார்த்தால், இவ் விரு குழந்தைகளுக்கும் மிக்க வியப்பும் விநோதமும் தாம் வேறு ஏதோ ஒரு உலகத்தில் இருப்பதுபோன்ற ஆச்சரியத்தோற்றமும் உண்டாகும். அதையே இமைகொட்டாது பார்ப்பார்கள்.

ஒரு தினம் 5-6 குழந்தைகள் மணலில் கோபுரங் கட்டுவதும் புருக்கூடுகள் கட்டுவதும், குச்சியைச் சொருகி தேடும் விளையாட்டு விளையாடுவதுமாக இருப்பதைப் பார்த்த ப்ரபா நந்தகுமாரனையும் இழுத்துக்கொண்டு அங்கு ஓடினாள். இவர்களைக் கண்ட அக் குழந்தைகள் குழந்தைகளின் சுபாவப்படிக்கு இவர்களை உற்று பார்த்தார்கள். சற்று நேரம் எல்லோரும் மவுனம் சாதித்த பிறகு அவர்களில் ஒரு சிறுமி, ப்ரபாவை "உனக்குக் குச்சி ஆட்டம் ஆடத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

வீட்டிலடைபட்டுக் கிடப்பதைத் தவிர வேறு ஒன்று மறியாத ப்ரபாவதி தெரியாதென்று தலையை அசைத்து, ஒருமாதிரியான ஏக்கமும் ஆவலும் கலந்த பார்வையுடன் அவர்களைப் பார்த்தாள்.

வேறு சிறுமி :—புருக்கூண்டு கட்டுவாயா!

ப்ரபா :—தெரியாதே...

சிறுமி :—கோபுரம் கட்டுவாயா!

ப்ரபா :—தெரியாது...

சிறுமி :—உனக்கு விளையாட்டே தெரியாதா! என்னதான் செய்வாய்?

ப்ரபா :—வீட்டில் என் அண்ணனுடன் பொம்மை வைத்து விளையாடுவேன்; வேறு தெரியாது.

சிறுமி :—உங்கம்மா உனக்கு வேறு சொல்லித் தரவில்லையா!

(ப்ரபா :—மவுனமாய்த் தலை குனிந்தாள்.)

சிறுமி :—உனக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா?

ப்ரபா :—ஒருவரும் இல்லை. எங்க தாயிதான் இருக்கிறாள்.

சிறுமி :—பள்ளிக்கூடம்கூடப் போவதில்லையா!

ப்ரபா :—நாகப்பா பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்.

சிறுமி :—ஐயய்யே! நாகப்பா பள்ளிக்கூடம் மிகவும் சிறியதல்லவா? அதிலா படிக்கிறாய்! அதில் என்ன படிப்பு வரும். உனக்குப் படிப்புமில்லை; விளையாடவுந் தெரியாது. நீ என்ன சுத்த நாட்டுப்புறமாயிருக்கிறாயே!நாங்கள் எல்லாம் இங்கிலீஷ்கூட கற்றுக் கொள்கிறோமே! எங்களுக்கு எத்தனையோ விளையாட்டுகள் தெரியும். பாட்டுப் பாடத் தெரியும். கும்மி கோலாட்டம் எல்லாம் அடிப்போம்....

என்று அவர்கள் படபடத்துப் பெருமையாயும், கர்வத்துடனும் சொல்லும் வார்த்தைகள் ப்ரபாவின் மனத்தில் என்றுமில்லாத ஓர் கலவரத்தையும் ஒருவிதமான சோகத்தையும் மூட்டிவிட்டதால் அந்த உணர்ச்சிகளின் வேகம் தெட்டென பிரகாசித்தது. தனக்கு ஒருவிதமான விளையாட்டும் தெரியாதிருப்பதோடு பெற்றோரும் இல்லாது தனிவாழ்க்கை வாழ்கிறோமே என்ற பெரும் ஏக்கம் குடி கொண்டது.

ப்ரபாவின் முகமாறுபாட்டை நன்கு அறிந்துகொண்ட நந்தகுமாருக்கு மனங் கலங்கியது. உடனே அவள் மனத்தை மாற்ற எண்ணியவனாய், "ப்ரபா! அதோ அலைகள் எப்படி மோதிவர்து பாரு. நாம் அலையில் சென்று நிற்போம். பிறகு கிளிஞ்சல்கள் பொறுக்கிக்கொண்டுபோய் வீடுகட்டி விளையாடுவோம்." என்று கூறி, அவளுக்கு வேறு பராக்குக் காட்டி அழைத்துச் சென்றுவிட்டான்.

சிறுமியாகிய ப்ரபாவதி அலைகளின் அழகிலீடுபட்டு மனங் கவரப்பெற்றவளாய் விளையாட்டில் பாய்ந்துவிட்டாள். சூர்யன்

அஸ்தமனமாகி மேற்திசையை நோக்கிச்சென்ற உடனேயே சந்திரன் தனது பூர்ண கிரணங்களுடன் கடலிலிருந்து அப்போதே குளித்தெழுபவன்போல பிரகாசித்துக்கொண்டே எழுந்தான். கடல் நீர் முற்றும் தங்கமயமாக மாறி இயற்கைத் தேவியின் இணையிலாத தரிசனத்தை மக்களுக்கு பிரகாசிக்கச் செய்த காட்சியில் நமது சிறுவர்களும் லயித்துப்போய், "ஹா...அதோ பாத்தியா! சந்திரன் கிளம்புகிறான். பெரிய டோம் விளக்குபோல இருக்குது பாத்தயா!" என்று பேசிக்கொண்டே இருக்கையில், இவர்களுக்குப் பின்புறமாக வந்த ஓர் கடுமையான குரல், "ஆம்! ஆம்! டோம் விளக்கும் டாம் விளக்கும் நீங்கள் நிரம்ப கண்டுவிட்டீர்கள்! கவிகளாகிய நீங்கள் இதை வர்ணித்து அழகிய பாடல் செய்யப்போகிறீர்களா!...

கொஞ்சங்கூடப் பயம் கிடையாது. இந்தக் காற்றிலும் குளிரிலும் இங்கென்ன வேலை? இது உடம்புக்குக் கெடுதி செய்தால் என்ன செய்வது வைத்தியருக்கு மூட்டையவிழ்க்க எங்கே போவது? ஏ? தாயீ! உனக்குமா புத்தி இல்லை? இப்படித்தான் இந்தச் சுண்டக்காய்களைச் சுயேச்சையாக விடுவார்களா! முதலில் வீட்டிற்கு அழைத்துச் செல்லு. ஊம்..." என்று அதட்டினதைக் கேட்ட இருவரும் தன்போக்காக ஆநந்தமாயிருந்த நிலைமை மாறி, திடுக்கிட்டு ஒருவிதமான பயத்தையும் கலவரத்தையும் அடைந்து, திருகத் திருக விழித்தவாறு ஓடிவந்து, தாயின் காலைக் கட்டிக்கொண்டார்கள். கிழவியின் கண்கள் சமுத்திரத்து நீருடன் போட்டி போட்டன. "மெல்லிய பஞ்சே கல்லுருவாயது" போல் நிற்கும் ஜகன்னாதனை ஒருவித வெறுப்புடன் பார்த்தபடியே திரும்பினாள்.

4-வது அதிகாரம்.

ஆநந்தக் கோட்டையில் அக்னி மழை பெய்தது

அன்று கடற்கரையில் தன்னைப்போன்ற சிறுமிகள் கூறிய வார்த்தைகளை மட்டும் ப்ரபா சற்றும் மறக்கவே இல்லை. அந்தக் கிராதக ஜகன்னுதனின் கொடிய வார்த்தைக்குப் பயந்துகொண்டு வீடுவந்த பிறகு ப்ரபா ஓர் தனித்த வேற்றுமையை அடைந்து ஒருநாளும் இல்லாத சோகம் அவள் கண்களில் ப்ரகாசித்ததை யறிந்த தாயி அவளைத் தேற்றி உத்ஸாகப்படுத்தும் பொருட்டு அவளை அந்தப் பள்ளிக்கூடத்தி லிருந்து வேறு பள்ளிக்கூடத்திற்கு மாற்றினுள்.

அங்கு பாட்டு, கும்மி, கோலாட்டம் எல்லாம் சொல்லிக் கொடுக்க வாரம்பித்ததால் அந்த ஆநந்தத்தில் சிறிது விசனம் மறை யப்பெற்று மீண்டும் விளையாட்டில் கவரப்பட்டிருப்பதைக் காண தாயின் மனம் களித்தது. நந்தகுமாரும் சற்று ஆறுதலுடன் இருந்தான்.

எனினும் பள்ளிக்கூடத்தில் ப்ரபாவைப் பார்த்த எல்லோரும் இந்தப் பெண்ணு! இது ஓடிவிட்டாளே அவள் மகளல்லவா! என்று என்னென்னவே குசுகுசுவென்று பேசுவதும் மற்ற சிறுமிகளை இவ ளுடன் அவர்களின் தாயார் சேரவிடாதிருப்பதும் ப்ரபாவுக்குத் தெரிந்து விசனிப்பாள். ஆனல், இளந்தளிராகிய அவளுக்கு முழு விவரமும் தெரியாதல்லவா?

இன்னிலைமையில் இருக்கையில்தான் நாம் கதை ஆரம்பித்து கால நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அன்று மற்ற சிறுமிகளை அவர்களின் பெற்ருேர்கள் திட்டி இழுத்துக்கொண்டு சென்றதைப் பார்த்ததும் ப்ரபா மிக்க சிறுமியாயிருப்பினும் துக்கம் பிய்த்துக்கொண்டு வந்து

விட்டது. அவளால் தாங்கவே முடியவில்லே. இனி எங்க வீட்டுக்கு வா! காலே ஒடித்துவிடுவேன் என்று கூறிய தீயினும் கொடிய வார்த்தைகள் அவளுடைய இளந்தளிர் போன்ற இருதயத்தைக் கருக்கிவிட்டது.

சிறுமி அப்படியே துவண்டுபோய் தண்ணீரிலிருந்து எடுத்து கரைமீது போட்ட மீன்போலத் துள்ளிச் சுருண்டு கீழே விழுந் தாள். நந்தகுமாரும் தாயும் ஓட்டமாக ஓடிவந்து ப்ரபாவை சிறு குழந்தையைப்போல வாரித் தூக்கி எடுத்துக்கொண்டுபோய் படுக்க வைத்து விசிறி குளிர்ந்த ஜலத்தைத் தெளித்து முகத்தைத் துடைத் தார்கள்.

ப்ரபா அலறி அலறி அழுதவாறு "தாயீ!...அண்ணு! ஏன் அவர்கள் என்னேடு சேரக் கூடாது? ஏன் நான் அவர்கள் வீட் டிற்குப் போகக் கூடாது? காலே உடைத்துவிடுவார்களாமே...நான் என்ன அத்தனே கெட்டவளா! நான் என்ன திருடியா! நான் என்ன பைத்தியமா? ஏன் அப்படிப் பேசினுர்கள்? பள்ளிக்கூடத்திலும் இம்மாதிரி ஏன் அவமானப்படுத்திப் பேசுகிறுர்கள். இதைச் சொல் லுங்கள்" என்று விக்கிவிக்கிப் புலம்பியபடியே படபடத்துக் கேட்டு வெறிபிடித்தவள்போல இருவரையும் பார்த்தாள்.

அப் பார்வையின் பயங்கரமும் அவள் கேள்விகளின் திடுக் கிடலும் கிழவியின் உயிரை ஒரு குலுக்கு குலுக்கியது. நந்தகுமார னும் மலே பெருத்தவனல்ல; ப்ரபாவை விட சிறிது பெரியவனுகையி னுலேயே அவனுக்கும் அந்தரங்க விஷயம் முற்றும் விவரமாகத் தெரியாது. தம் குடும்பத்தில் ஏதோ ஒரு பயங்கரமானதும் இழி வானதுமான ரகஸ்ய சம்பவம் நிகழ்ந்திருக்கிறதென்று மட்டுமறிவா னுகையினுல், தன் தங்கையின் நிலேமை அவனே மிகவும் பாதித்து உருக்கியது. அவனும் கோவென அழுதுவிட்டான்.

பரதேசிக் குழந்தைகளுடன் பரிதவிக்கும் தாயி என்ன செய் வாள் பாவம்! சமயத்திற்குத் தக்கபடி ஏதோ ஒருவிதமான சமா தானத்தைக் கூற எண்ணி, ப்ரபா! இது ஓர் பெரிய விஷயமாக எண்ணி அழுகிறுயே கண்ணே! இது தெரியாதா! நீ மகா புத்திசாலி. அழகி. கெட்டிக்காரத்தனமாகப் படிக்கிறுய். இனிமையாகப் பாடுகி

ரூய் என்ற வயிற்றெரிச்சலால் இம்மாதிரி உன்னைக் கண்டு அவர்கள் பேசுகிறார்களேயன்றி வேறில்லை.

ப்ரபா! இதோ பாரு, அந்தப் பெண்களெல்லாம் மக்குகள், சற்றும் ஞான மில்லாத மண்டூக்கள். ஆகையினால்தான் அவர்கள் பிதாவுக்கு வயிற்றெரிச்சலால் இவ்விதம் சொல்லிவிட்டார்கள். நீ இந்த அல்பங்களை ஒரு பொருட்டு பண்ணாதே! இனி அவர்களுடன் நீ பேசாதே; நீ உன் பள்ளிக்கூடத்துக்குப் போய் உன் படிப்பு எவ்வளவோ, வேலை எவ்வளவோ அம்மட்டும் செய்துகொண்டு நேரே வீட்டிற்கு வந்துவிடு. இந்த வயிற்றெரிச்சல் பசங்கள் உன்னை அடித்து இம்சித்தலும் செய்யலாம். ஆகையால் சமத்தாயிரு.

கொலுவுக்கு இனி இவர்கள் வரவேண்டாம். நமது வேலைக்கார குப்பி இருக்கிறாள் பாரு; அவளிடம் சொல்லி அவள் பேத்திகளையும் இன்னும் சில பெண்களையும் அழைத்து வருகிறேன். நீ அவர்களுக்கு வெற்றிலை பாக்கு சுண்டல் எல்லாங் கொடு. ஏழைகளாகிய அவர்கள் சந்தோஷமாக உன்னை வாழ்த்துவார்கள். இந்தக் கர்வம் பிடித்த மூதேவிகளை இனிக் கூப்பிடாதே! எழுந்திரு, வா! கொலுவுக்கு ஆரத்தி எடு. கண்ணல்ல நீ, என் செல்லமல்ல, என்று சமயோசித யுக்தியுடன் கூறிப் ப்ரபாவின் விசனத்தை ஒரு நொடியில் மாற்றி, அவளை மெல்ல அழைத்துக்கொண்டு வந்து கொலுவின் எதிரில் உட்காரவைத்தாள்.

உடனே குப்பியை அழைத்து அவள் பேத்திகளைக் கூட்டிவரச் செய்தாள். அடுத்த நிமிடம் நாலைந்து சிறுமிகள் கந்தத் துணியுடனும் பறக்கும் தலையுடனும் வந்து உட்கார்ந்தார்கள். தாயி அந்தப் பெண்களைப் பாடிக் கும்மி யடிக்கச் சொன்னாள். சிறுமிகளும் முறையே, "பிள்ளையார்! பிள்ளையார்! அவரெங்கேயோ பிள்ளையார்! செட்டிச்சி தெருவிலே சேண்டாடுகிறார் பிள்ளையார்" என்று ஒருத்தி பாடவும் மற்றவர்கள் சந்தை சொல்லவும் கும்மி யடிக்க வாரம்பித்தார்கள்.

இந்தப் பாட்டையும் கும்மியையும் கண்டதும் கேட்டதும், ப்ரபாவின் விசனங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல பறந்து போய் கடகடாவென்று தன்னை மீறிய ஆநந்தத்துடன் சிரித்து,

தாயின் கையைப் பிடித்துக்கொண்டாள். அப்போதுதான் தாயின் உயிர் சரியாகத் திரும்பி பெருமூச்சுடன் வந்தது. மட்டற்ற மகிழ்ச்சியோடு ப்ரபாவை இறுகத் தழுவி முத்தமிட்டாள். அபலை யான ப்ரபா என்றும் இதேமாதிரியான சந்தோஷத்துடன் இருக் கும்படி கொலு வீற்றிருக்கும் கடவுளை வேண்டினாள்.

பிறகு தான் செய்து வைத்திருந்த சுண்டலை ஸ்வாமிக்கு நிவே தனம் செய்துவிட்டு, ப்ரபாவின் கையினாலேயே அவ் வேழைச் சிறு மிகளுக்கு வெற்றிலை பாக்குடன் சுண்டலையும் கொடுக்கச் செய்தாள். ப்ரபா அளப்பரிய ஆநந்தத்துடன் அந்தச் சுண்டலை அச் சிறுமிக ளுக்குக் கொடுத்தாள். கேவலம் ஏழைச் சிறுமிகளாகிய அவர்கள் சுண்டலை வாங்கி ஆவலுடனும் அன்புடனும் அங்கேயே தின்று சாந்த மடைந்தார்கள்

ப்ரபா அவர்களைக் கண்டு அபாரமான ஆநந்தங் கொண்டாளே யன்றி, அருகில் நெருங்க அவர்களின் சுசியற்ற தன்மை வெறுப்பை யுண்டாக்கியதால், மகா புத்திசாலியான ப்ரபா உள்ளே ஓடிப்போய் ஒருகட்டி துணிச் சோப்பும், ஒரு பொட்டலம் சீக்காய்ப் பொடியும் கொண்டுவந்து அவர்கள் கையில் கொடுத்து, "பெண்களே! இதோ இந்தச் சோப்பை நாளைக்கு உங்கள் துணிகளுக்குப் போட்டுத் துவைத்து உலர்த்துங்கள். சீக்காய்ப் பொடியைத் தேய்த்து சுத்தமா கக் குளித்துவிட்டு குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு வாருங்கள். நவராத்திரி முடியும் வரையில், நீங்கள் தினம் வாருங்கள்; சுண்டல், வடை, பழம் எல்லாம் தருகிறேன்' என்று வெகு அழகாகக் கூறினாள்.

உலகத்தில் இம்மாதிரியான சுகாதாரத்தைப் பற்றி, சிறு பிரசா ரம் எல்லோரும் செய்தால், எத்தனையோ ஏழைகளும் சுத்தமாகி சுசியாகி விடுவார்களன்றோ! இச் சிறுமிகள் சந்தோஷமாக சோப்பை யும் சீக்காய்ப் பொடியையும் வாங்கிக்கொண்டு "ஆவுட்டும், குளிச் சிப்புட்டு நல்லா வரோம்'' என்று கூறிக்கொண்டு போய்விட்டார்கள். அப்போது இரவு 9 மணிக்கு மேலாகிவிட்டது.

தாயி ப்ரபாவின் சந்தோஷத்தினால் பூரித்துவிட்டாள். குழந் தைகளுக்குச் சாதம் போட்டு அந்தச் சந்தோஷத்துடனே தூங்கப்

பண்ணிவிட்டாள். அன்று முற்றும் ப்ரபாவதி நவராத்திரியின் ஆநந்தத்திலேயே மூழ்கி அதே சொப்பனங் கண்டு புரண்டுகொண்டிருந்தாள். மறு தினம் அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, நவராத்திரி கொலுவுக்குத் தாயின் உதவியால் பூஜைசெய்து நைவேத்தியம் பண்ணி நமஸ்கரித்தாள். உடனே பள்ளிக்கூடத்திற்குச் சென்று மாலை 5 மணிக்குள் திரும்பி வந்து அலங்காரம் செய்து கொண்டு, அச் சிறுமிகளின் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

6 மணிக்கே ஏழைச் சிறுமிகள் முதல் நாள் வந்ததற்கு நேர்மாறாக வந்துவிட்டார்கள். அவர்கள் ஆடைகள் சுத்தமாயும் தலைவாரிப் பின்னி கொட்டை சாமந்தி மலரணிந்தும் நெற்றியில் குங்குமப் பொட்டும் இட்டுக்கொண்டு வெகு குதூகலமாயும் ஆநந்தமாயும் வந்துவிட்டதைப் பார்த்ததும் ப்ரபாவிற்கு ஆச்சரியமும் ஆநந்தமும் உண்டாகிவிட்டன.

அவர்களை அன்புடன் வரவேற்றுப் பாட்டு பாடச் சொன்னாள். அவர்களுக்குத் தெரிந்த வள்ளியம்மா கதை; தேவானையம்மா கும்மி; பிள்ளையார் பாட்டு முதலியன பாடிவிட்டார்கள். முதல் தினத்தைப் போல சந்தோஷமாகப் பண்டிகைக் கொண்டாடப்பட்டதும் சிறுமிகள் சுண்டலுடன் ஆநந்தமாக வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

இம்மாதிரியே ப்ரபாவதி அச் சிறுமிகளின் கூட்டத்துடன் வெகு மகிழ்ச்சியாயும் மங்களகரமாயும் நவராத்திரிப் பண்டிகை இனிது முடித்து விட்டாள். ப்ரபா அந்த நவராத்திரியில் தான் பட்ட அவமானத்திற்குப் பிறகு அவள் எந்த வீட்டிற்கும் அடி எடுத்து வைப்பதேயில்லை. தன் அண்ணனும், தாயும்தான் அவளுக்குப் பொழுது போக்கும் துணையாய் அமைந்தார்கள். பள்ளிக் கூடத்தில் கூட வேறு எந்தப் பெண்களுடனும் சேரமாட்டாள். தான் படிப்பதும் தன் பாடங்களைக் கவனிப்பதும் நேரே வீட்டிற்கு வருவதுமாய் வெகு சுறுசுறுப்பாய்ப் படித்து வந்தாள்.

சக்கரம் சுழலுவதேபோல் மனிதர்களின் வாழ்க்கையும் சுழன்று சில வருடங்களை யோட்டிவிட்டன. ப்ரபாவதிக்கு 14வது

வயது வந்துவிட்டது. நந்தகுமார் மெட்ரிக்குலேஷன் வரையில் படித்தபிறகு அதிக படிப்பிற்குப் பணங் கிடையாதென்றும் எங்காவது வேலைக்குத்தான் போகவேண்டுமென்றும் ஜகன்னாதன் திட்டம் போட்டுவிட்டான். வேலை எங்கு கிடைக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமென்கிற தொத்து வியாதி உலகத்தில் பல பாகங்களிலும் பீடித்திருக்கையில்? திக்கற்ற இந்த அனாதைப் பையனுக்குச் சிபார்சு செய்யவும் மனிதரற்ற நிலையில், எந்த ஆபீஸில் உத்யோகங் கிடைக்கப்போகிறது.

நந்தகுமாரனுக்கு அப்போது மைனர் நீங்கவில்லையாதலால், ஏதும் கேட்கவும் மாட்டாது தவித்தான். எங்கேயோ தானே சுற்றியலைந்து ஒரு பெரிய ப்ரபுவைப் பிடித்துத் தனக்கு உபகாரச் சம்பளம் பெற்று மேலே படிக்கவாரம்பித்து எப்.ஏ. படிப்பு முடித்து பி.ஏ. வகுப்பில் சேர்ந்தான். இப்போதுதான் நந்தகுமாரனுக்கு மைனர் நீங்கும் காலம் சமீபித்துவிட்டதை யறிந்த ஜகன்னாதனுக்குத் தான் செய்துள்ள மோசத்தைக் கண்டுபிடித்துத் தன்மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கும் பொருட்டு, அதற்கு வேண்டிய மற்ற மோசத்தையும் செய்து சரியானபடி கணக்குக் காட்டிவிடத் தீர்மானித்து விட்டான்.

ஒரு பொய்யை மறைக்கவேண்டி ஒன்பது பொய் சொல்வது என்ற பழமொழிப்படிக்கு ஜகன்னாதனின் செய்கை யமைந்தது. ப்ரபாவதிக்குப் பதினான்கு வயதாகிவிட்டதால், அவளை மணக்கத் தக்க சரியான இடத்தைத் தேடி கல்யாணத்தைச் செய்துவிட்டால், பணத்திற்குக் கணக்குக் காட்டும்போது தனக்கு அநுகூலமாகச் செய்துவிடலாம் என்ற முன் யோசனையுடன் அதற்கான முறையில் வரனைத் தேட வாரம்பித்தான்.

ப்ரபாவதி, யுக்த வயது வந்தவுடனேயே அவளுடைய சோபையும் லாவண்யமும் தனி ப்ரகாசத்துடன் காண்போர் மனத்தைக் கவரத்தக்க சுந்தர ரூபவதியாய் அழகு தெய்வமாய் விளங்கினாள். அவள் அன்னத்தைப் பழிக்கும் அபூர்வ நடையுடன் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்போதும் வரும்போதும் வீதியிலுள்ள

பல கண்கள் அவள்மீதே லயித்து ஆணியறைந்து விட்டதுபோன்ற சம்பவத்தை அறியாது ப்ரபா தனக்கு ஆப்தமானவள் பூமாதேவி தான் என்ற நம்பிக்கையுடன் பூமியைப் பார்த்தபடியே சென்று விடுவாள்.

தன்னுடைய இழிவுக்குக் காரணமும் தன் தலைவிதியின் விபரீதமும் ப்ரபா நன்கறிந்துகொண்டு, தன் மனத்திற்குள்ளே சதா பெருங் கவலையுங் குழப்பமும் அடைந்து ஏங்குவாள். சமூகம் தங்களைச் செய்திருக்கும் கொடுமைகளை எண்ணி எத்தனையோ இரவுகள் கண்ணீர் வடித்துருகி வருந்துவாள். தன் படிப்பின் ஆநந்தத்தினால் தன் விசனத்தை மறந்திருப்பாள். சரஸ்வதியின் திவ்ய ப்ரஸாதமாகிய கல்வியின் இன்பத்தில் ஈடுபட்டிருக்கும் யாருக்குத் தான் மெய் மறக்காதிருக்க முடியும். கல்வியே தனக்குப் பெரிய துணையாகக் கொண்டு தன்னைத் தானே தேற்றிக்கொள்வாள்.

இன்னிலைமையில் ப்ரபா இருக்கையில், அவளுக்கு நாம் முன்பு கூறியபடியே விவாகத்திற்கு ஜகன்னாதன் ஏற்பாடு செய்யத் துணிந்தான். இவ்விஷயத்தை ப்ரபாவிடமும் நந்தகுமாரிடமும் தெரிவிக்கச் சமயம் பார்த்து கொண்டிருந்தான்.

ஒரு தினம் ப்ரபா, தாயிக்கு 'சோதனையின் கொடுமை' என்கிற அருமையான நாவலைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தாள். தாயி அக்கதையைக் கேட்டு மிக்க வியப்பும், திகைப்பும், விசனமும் அடைந்தவளாய், "ஹா! பெற்ற தாயாருக்கு இப்படியும் ஒரு கண் வெண்ணெய்யாகவும், ஒரு கண் சுண்ணும்பாகவும் இருக்குமா? என்ன அநியாயம்...ஊம். பெற்றவர்களே மோசம் செய்யும்போது மற்றவர்கள் உங்களைப் போன்ற அனாதைகள் கேட்பாரற்ற சொத்துடன் பிறர் கையில் அகப்பட்டால் மோசம் செய்யக் கேட்க வேண்டுமா, பணத்தைப் பார்க்கும் முன்பு யோக்யமாயும், உண்மையான வாஞ்சை நிறைந்த உள்ளத்துடனும் இருந்த ஜகன்னாதன் பணத்தைப் பார்த்து உடனே மனம் மாறிவிட்டதை, நாம் கண்ணால் பார்க்கவில்லையா! ஊம்......தெய்வம் தூங்கவில்லை. பார்த்துக் கொண்டுதானிருக்கிறது. சரியான கூலிதான், கொடுக்கும்" என்று கூறிக்கொண்டே இருக்கையில் ஜகன்னாதன் அங்கு வந்து விட்டான்.

தாயி சொல்லிய கடைசி வார்த்தை அவன் காதில் விழுந்த உடனே திடுக்கிட்டான். ஒரு இமை கொட்டும் நேரம், தான் செய்தது, செய்யப்போவது இரண்டும் மிக்க தவறுதலானவை என்ற உணர்ச்சி மின்னல்போலத் தோன்றியது. தனக்குக் கடவுள் என்ன விதமான தண்டனை கொடுப்பாரோ என்ற ஒருவிதமான பயங்கரம் தேகம் முற்றும் மின்சாரம் போலத் தாக்கியது. அடுத்த வினுடியே அவ்வெண்ணம் மறைந்து, தனது தற்போதைய தீய எண்ணத்தின் உச்ச ஸ்தானத்தில் புத்திவந்து நின்று விட்டது.

உடனே எண்ணத்தினின்று பிறழக் கூடாதென்ற உறுதி உண்டாகி விட்டதால், ப்ரபாவுக்குத் தாயே கலகம் செய்வதாகத் தோன்றியதால்,தாயின்மீதே கோபம் பொங்கி விட்டது. இப்போது, தான் கடுமையைக் காட்டினுல், ஒருகால் காரியம் எங்கே மிஞ்சி விடுகிறதோ என்ற பயத்தினுல், தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு, சாதாரண முகபாவத்துடன், "ப்ரபா, என்ன படிக்கிருய்! நந்தகுமார் எங்கே? தாயீ! ஸ்வாரஸ்யமாய்க் கதை கேட்கிருயோ!" என்று பேசிக் கொண்டே வந்து உட்கார்ந்தான்.

தாயிக்கு இவன் முகத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. ஒருவாறு முகத்தை வைத்துக் கொண்டு, "ஆமாம். என்பிழைப்பே வெகு ஸ்வாரஸ்யமானது. அதிலும் நான் கதை கேட்பது வேறு ஸ்வாரஸ்யமல்லவா? ஏதோ பொழுது தொலைய வேண்டுமே என்று கேட்க உட்கார்ந்தால், அதுவும் ஒரு பரதேசிகளின் கதையாகவே இருக்கிறது. பெற்ற தாய்தந்தையர்களே தன் மக்களை வஞ்சனையாய் மோசம் செய்து கண்ணீர் வடிக்கச் செய்யும் கண்ருவி சகிக்கமுடியவில்லை—உலகமே மோசம். உலகமே வஞ்சனை—என்று நைஸாக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போலக் கூறினுள்.

இவ்வார்த்தையை ஜகன்னுதன் லக்ஷியமே செய்யாதது போல தலையசைத்துவிட்டு, ஊம்......உலகத்தில் பிறந்த பிறகு எல்லாவற்றையுந்தான் அறிய வேண்டும். உலகத்தில் நடப்பவைகளை நாவலிலும்; வரைகிருர்கள் அதைப்படித்தால் உண்மை போலத்தான் தோன்றும். என்ன செய்வது.........சரி......நான் ஒரு முக்ய காரிய

மாக வந்திருக்கிறேன். நந்தகுமார் எப்போது வருவான்?'' என்ருர்.

ப்ரபா:—தெரியாது சித்தப்பா! எங்கே போனுனே! சொல்ல வில்லை. என்று கூறி முடிக்குமுன் நந்தகுமாரன் பந்தாடிவிட்டு பேட்டும் கையுமாக வந்தான். அவனைக் கண்டவுடன் ஜகன்னுதன் நந்தகுமார் வா அப்பா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். ஒரு முக்கிய விஷயம்'' என்று சொன்னுன்.

நந்தகுமார் ஜகன்னுதனருகில் வந்து "என்ன சித்தப்பா?', என்று உட்கார்ந்தான். ஜகன்னுதனும் மிக்க அன்புடன் பேசுபவன் போல நடித்து, என்ன இருக்கிறது. ப்ரபாவின் விவாகத்தைப் பற்றிய விஷயந்தான். உங்கள் தாயின் கொடுமையாகிய செய்கையின் பலன் உங்கள் வாழ்க்கையின் நிழலாக அமைந்துவிட்டது. உங்கள் நிலைமையைத்தான் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்! நான் கூற வேண்டாம்.

உங்கள் வீட்டிற்கு வரும் சிறுமிகளையும் பிறர் திட்டியடித்துக் கட்டு செய்த பரிபவம் நினைவிருக்கலாம். தாயைப்போலப் பெண்ணும் நாடோடி. அப்படி, இப்படி என்று உலகத்தில் பேசுவது கொஞ்சமன்று. இதைக் கேட்கும்போது என் இருதயம் வெடித்துவிடும் போல விருக்கிறது. எப்படியாவது ப்ரபாவை ஒருவனுக்கு மணம் செய்து வைத்து, அவளைக் குடும்ப ஸ்திரீயாக்கி விட்டால், பிறகு தான் உன் தந்தையின் ஆத்மா சாந்தியடையும். அவர் ஆத்மா சாந்தியடைந்தால்தான் உங்களுடைய க்ஷேமத்தின் அஸ்திவாரம் சரியாகும். அதனுல் மேன்மேலும் விருத்தி யடையலாம்.

நான் வெளியூர் ஆசாமி ஒருவனைப் பிடித்து, நல்ல குடும்பம் ஒன்றில் சரியான வரன் ஒன்றை நிச்சயம் செய்திருக்கிறேன். பையனுக்கு வயது 25தான் ஆகிறதாம். அவனுக்கு ஆஸ்தி ஏராளமாக இருக்கிறதாம். நமது பழைய கதைகள் ஒன்றும் அவர்கள் அறியமாட்டார்கள். அதனுல் ப்ரபாவின் படத்தைப் பார்த்த உடனே விவாகத்திற்கு இசைந்து, இம்மாதம் 7 தேதியன்று முகூர்த்தமும் வைத்து,

இதோ கடிதமும், பெண்ணுக்கு நகைக்காக பணமும் அனுப்பிவி ட்டார்கள். இனிமேல் ஒன்றும் பேச வேண்டியதில்லை.

என்ன ப்ரபா! ஏன் முகத்தை யொருவாறு வைத்திருக்கிறாய்? உன்னைச் சுற்றி எத்தகைய அபவாதங்கள் நிறைந்து உலாவுகின்றன வென்று உனக்குத் தெரியாது. அதைப் போக்கிக் கொள்ள வேண்டு மாயின் நீ உடனே கல்யாணம் செய்து கொண்டால்தான் முடியும். இல்லையேல் அந்த இழிவான காற்று பெரும் புயலாக மாறி உன் வாழ்க்கையை அடியோடு பாழ்படுத்திவிடும். நீ பெண்பிள்ளையாத லால், உனக்கு உறுத்திச் சொல்லுகிறேன். நந்தகுமாரனுக்கு அத் தகைய சங்கடங்களில்லை. ஏனெனில் அவன் ஆண் சிங்கம். நீ பெண் பேதை. உனது நன்மையையும், கண்ணியமான வாழ்க்கையையும் நீ விரும்பி கட்டாயம் தடைசெய்யாது மணக்க வேண்டும். பிறகு உங்களிஷ்டம்.

உங்கள் குடும்பத்தின் ஆபாஸ ரகஸ்யம் இன்னும் பரவி விட்டால், பிறகு உன்னை யாரும் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார் கள். எல்லாம் வியர்த்தமாகி விடும். நந்தகுமார், என்ன சொல்லு கிறாய்?'' என்று கேட்டார்.

இதைக் கேட்ட நந்தகுமாரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ப்ரபாவின் முகத்தைப் பார்க்கிறான். தாயின் முகத்தைப் பார்க் கிறான். எப்படியாவது தங்களைச் சார்ந்துள்ள பெரும் அவமான காரமான போர்வையைக் களைந்தெறிந்துவிட்டால் போதும் என்ற எண்ணம் நந்தகுமாரனுக்கு மனப்பரிபூர்ணமாக உண்டு. ஆகையினால் அவன் இந்தக் காரியத்திற்கு மிகவும் சம்மதமே கொண்டான்.

ப்ரபாவதிக்கு மட்டும் மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. எனி னும் தன்னை உலகம் தூற்றாமல் போற்ற வேண்டும் என்ற ஆவல் நிறைந்திருந்தது. தங்கள் குடும்ப சூழல் தெரிந்த எந்த மனிதரும் தன்னை மணக்கச் சற்றும் சம்மதிக்க மாட்டார்கள் என்பதும், அவள் மனம் அறியும். உயர் குடும்பத்தைப்பற்றித்தான் நினைப்பது முற்றும் பகல் கனவென்பதும் நன்றாகத் தெரியும் விவாகமே இல்லாது

இருந்துவிடலாம் என்று நினைத்தாலோ, "சாமள நாதன்" என்ற புத்தகத்தைப் படித்திருப்பதால், அதனல் எத்தனை விபத்துக்கள் உண்டாகும் என்ற பயங்கரமும் மனக்கண் முன்பு தோன்றியதால் எண்ணெயில் விழுந்த ஈ போன்று குழம்பினுள்.

மீண்டும் சற்று தைரியமடைந்து; "ஏன் சித்தப்பா!என் குடும்பத்தின் ரகஸியம் தெரியாது அவர்கள் செய்து கொண்ட பிறகு என்னைத் தள்ளிவிட்டால் என்ன செய்வது? அப்போது என் கதி என்னவாகும்? என்று கேட்டாள்.

நந்தகுமாரும் அதையே கேட்டான்.

இதைக் கேட்ட ஜகன்னுதன், "அப்படி யொன்றும் நடக்காது அவர்கள் அசல் வடக்கத்தியார்கள். அந்த ஊரைவிட்டு வருவதற்கே காரியமில்லை. இந்த ஊழலெல்லாம் இப்பக்கத்துடன் சரி. வேறு யாருக்கும் தெரியாது. நாம் நான்கு பேர்கள் தானே போகப் போகிறோம். உன் படத்தைப் பார்த்ததும் பையன் உன்மீது அளவற்ற ஆசை கொண்டு விட்டானும். ஆகையினுல், அந்தப் பயமே இல்லை.

இன்னெரு முக்ய விஷயம். உனக்கு விவாகமென்ற விஷயமே வெளியாருக்கு ஏன் ஒரு காக்காய்க்கு கூட தெரியக் கூடாது. ஏனெனில், வீணுகக் கலகம் ஏதேனும் செய்துவிட்டால், பிறகு நிரம்ப கஷ்டமாகிவிடும். இந்த விஷயம் உலகத்தில் பரவி விட்டால், அதன் பின்பு விவாகமே சொப்பனமாகிவிடும். உங்கள் பிதாவுக்கு நான் கொடுத்த வாக்கை மறக்காது செய்து விட வேண்டியது என் கடமையாதலால், உள்ளபடி சொல்லி விட்டேன்," என்று கூறினுன்.

இவை முற்றும் மிக்க உண்மையாக, நந்தகுமாருக்குத் தோன்றியதால், அவன் இதை உடனே செய்துவிட வேண்டும் என்ற முடிவுக்கே வந்து விட்டான். ஆயினும், நன்ருக யோசித்து இரவு பதில் செல்வதாகக் கூறி விட்டான். ஜகன்னுதன் இரவு வருவதாகக் கூறிச் சென்ருன். நந்தகுமாரும் தாயியும் நன்கு யோசனை செய்ததில் தங்களுடைய அவமானம் மறைந்து ஒரு கண்ணியமான நிலை

மைக்கு வரவேண்டியதைத்தான் பார்க்கவேண்டும் என்ற முடிவுக்கே வந்து விட்டதால், ப்ரபா மட்டும் என்ன சொல்ல முடியும். எப்படியாவது தங்கள் குடும்பத்தின் இழிவு மறைந்தால் போதும் என்ற ஒரே நோக்கத்துடன் தன் தமயனின் மனப்படிக்கு இசைந்து விட்டாள்.

அன்றிரவே ஜகன்னுதனிடம் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார்கள். ஜகன்னுதன், சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு, முகூர்த்தத்திற்கு முதல் நாள் இவர்களை அழைத்துக் கொண்டு பிரயாணமாகி விட்டான். இந்த விவாக விஷயம் பரம ரகஸியமாகவே இருப்பதால், இந்நால்வரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

எல்லோரும் ஊருக்குவந்து சேர்ந்தார்கள். விவாகம் வெகு சிறப்பாக நடக்க வேண்டிய சகல ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன. கல்யாணப் பெண்ணுகிய ப்ரபாவைக் கண்டு மயங்காத பெண்பிள்ளையே இல்லை யென்றால், வேறு கூற வேண்டாம். எல்லோரும் "இத்தகைய மருமகளை அடைய என்ன பாக்யம் செய்தாயோ?" என்று மாமியாரைக் கொண்டாடத் தொடங்கி விட்டார்கள்.

வெகு சிறப்பாயும் கண்ணைக் கவரத்தக்க நிலைமையிலும் ஜோடித்திருந்த மண அறையில் மணமகனும் மணமகளும் சாக்ஷாத் ரதியும் மன்மதனும்போல வீற்றிருந்தார்கள். சாஸ்திர முறைப் படி மணச் சடங்குகள் நடந்துகொண்டே இருக்கின்றன. கல்யாணத்திற்கு ஏராளமான ஜனங்கள் வெகு ஆநந்தமாகக் கூடிவிட்டார்கள்.

மண அறையிலிருக்கும் மணமகளைப் பார்த்த மணமகனின் உள்ளம் கட்டு மீறிய ஆநந்தத்தினால் விகசித மடைந்தது. ஆனால், ப்ரபாவின் மனம் படும் வேதனையைக் கூறத்திறமன்று. தன் பிதாவின் முகமும் அவருடைய மறைவும் அவள் இருதயத்தைத் தாக்கியது. அந்தோ நம் தாயின் கதிதான் அலங்கோலமாக முடிந்த தெனினும் தந்தை கூடவா நம்மை விட்டுப்பிரிய வேண்டும். இதுவும் நான் செய்த கர்மமேயன்றி வேறல்ல. அவர் உயிருடன், இருந்தால்

நம்மை இம்மாதிரி ரகசியமாக மணம் செய்வித்து முன் பின் அறியாத பேர்வழிகளிடம்; தள்ளத் துணிவாரா?

என்னுடைய அதி பாலியமாயினும் அவர் என்பால் காட்டிய ப்ரீதியும் உயிரையே வைத்திருந்த கரைகாணாத வாஞ்சையும் இன்னும் என் மனத்தில் ஆழமாகப் பதிந்து கிடக்கின்றதே. அவர் ஜீவித்திருந்து அவர் கையினாலேயே இந்தக் காரியத்தைச் செய்திருந்தால், எத்தனையோ ஆநந்தமாயிருக்கும்......உம்......தலைவிதி. இங்ஙனமிருக்க வீண்வார்த்தைகளும் எண்ணங்களும் எதற்கு? முடவன் கொம்புத்தேனை எண்ணி கொட்டாவி விடுவது போலத் தானாகும் என்று எண்ணாததும் எண்ணி மனம் தவித்துக் கண்ணீரை வடித்து உருகுகிறாள். அவளால் அறியக்கூடாத விதமான வேதனையும் மனக் கலக்கமும் அவளைப் பாதிக்கின்றன. இன்னிலைமையில் மணமகனைப் பார்க்கவும் அவள் மனம் இடங் கொடுக்கவில்லை. தன் வாழ்க்கையின் முடிவுகாலம் முற்றும் இவனோடு வாழ வேண்டிய விதியமைந்து விட்டதால் அத்தகைய மனிதன் எங்ஙனமிருக்கிறான் பார்க்கலாம் என்ற எண்ணமும் இடை இடையே தோன்றுவதால், மெல்லக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டுத் தலை நிமிர்ந்து கடைக் கண்ணால் பார்க்க எத்தனித்தாள்.

அப்போதே விவாகத்திற்கு வந்த ஒரு மனிதன் மணவறையில் வீற்றிருக்கும் தம்பதிகளைப் பார்த்தவுடனே, சற்று நிதானமாகக் கூர்ந்து கவனித்தான். அப்போதுதான் முகூர்த்தம் ஆகும் சமயம். ஆகையினால், அவன் வெகு பரபரப்பும் பதட்டமும் அடைந்து, "ஓய் புரோகிதரே! சற்று நிறுத்தும்! சற்று பொறும்......குமாரசாமி! காமாக்ஷியம்மா! நீங்கள் மோசம் போய்விட்டீர்கள்! ஏமாந்துவிட்டீர்கள். இந்தப் பெண் நல்ல குடும்பத்துப் பெண்ணல்ல. ஓடிவிட்டவளின் மகள். ஜாதிக் கட்டுப் போட்டிருக்கும் இழி குடும்பத்துப் பெண். இருந்து இருந்து நீங்கள் ஒரு பிள்ளைக்குக் கல்யாணம் செய்வது; இத்தகைய சம்மந்தமா செய்யவேண்டும்? வேண்டுமென்று உங்களை ஏமாற்றி யாரோ செய்த சூழ்ச்சி இது. விழித்துக்கொள்ளுங்கள்" என்று ஒரு கூச்சல் போட்டான்.

இந்த வார்த்தைகள் சபையில் கேட்டவுடனே, எல்லோரும் திடுக்கிட்டு அலறி யடித்தவாறு, “ ஹா!...கெட்டுவிட்டவளின் மகளா! என்ன அக்கிரமம்! என்ன அநியாயம்! யார் இம்மாதிரி மோசம் செய்தது?'' என்ற பெருத்த குழப்பமும் கலவரமும் பர பரப்பும் உண்டாகிவிட்டன. மணமகனின் தாயும் தந்தையும் கொடிய பாம்பை மிதித்தவர்கள்போல், “ ஹா! இது உண்மையா? இத்தகைய மோசமா நடந்துவிட்டது'' என்று பிரக்ஞை யற்றுப் போனார்கள்.

கல்யாண வீடு கலவர வீடாக மாறி; வந்துள்ள பந்துக்களெல் லாம் தாறுமாறுகத் திட்டியபடியே மூலைக் கொருவராகப் பார்த்துக் கொண்டார்கள். ப்ரபா ஓவெனக் கதறியபடியே மூர்ச்சையாகி, மண அறையிலேயே விழுந்துவிட்டாள். தாயிக்கும் நந்தகுமாருக் கும் பேரிடி தலையில் விழுந்தது போலாய்விட்டது. திருடனுக்குத் தேள் கொட்டியது போலாய் விட்டதால், ஜகன்னுதன் விழித்துக் கொண்டே எங்கே தன் முதுகுத் தோல் உரிந்துவிடுமோ என்று கும்பலில் நகர்ந்துவிட்டான். ஆநந்தக் கோட்டையில் அகினி மழை பெய்தது போலாய்விட்டது. வாழ்க்கையின் நிழல் செய்யும் பரிபவத்தைப் பார்த்தீர்களா?

Printed at Tata Press, & Published by V. M. Parthasarathy, Madras

எனது கோரிக்கை

அறிவில் சிறந்த சகோதர சகோதரிகளே !

கருணாசாகரனின் கருணைமாரியினாலும் உங்களுடைய பேராதரவினாலும் அன்பான குறைவிலா அபிமானத்தினாலும் மோகினிச்செல்விதன் 13 ஆண்டுகளை இன்பகரமாயும் உன்னதமாயும் கழித்து, நாளது 1937 ஹு ஜனவரிமாதம் முதல் தேதியன்று 14வது பிறந்த தினத்தை அடையப் போகிறாள் என்ற சந்தோஷச் செய்தியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் பேரன்பு மழையினாலேயே செழித்தோங்கும் பயிராகிய மோகினிச் செல்வி, தனது 14வது ஆண்டின் போஷணைக்காக வழக்கம் போல், உங்களுடைய அபாரமான உதவிக்குத் தன் இரு சிறு கரங்களை நீட்டிக் கோருகிறாள். பத்திரிகை உலகின் விஷயங்களை நன்கறிந்த அறிவாளிகளாகிய நீங்கள் அறியாததொன்று மில்லை. உங்களுடைய அன்பின் ஆசியை (வருஷ சந்தா ரூ. 1—8—0) தயவு செய்து தாமதமின்றி அனுப்பி, பேருதவியை யளித்து, மோகினிச் செல்வியையும் ஆதரித்து எனக்கும் ஊக்கமும் உத்ஸாகமும் அளிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

மற்றொரு சந்தோஷச் செய்தி, அனாதைப்பெண் அல்லது கனிந்த காதலர் என்ற நாவல் நாம் குறித்திருந்த தவணைக்குள், அச்சாபீஸின் அதிக வேலைத் தொந்தரவால் வெளியிட முடியாததைப்பற்றி வருந்துகிறேன். அப்புத்தகம் விஜயதசமி யன்று வெளிவந்து விட்டது. முன்பணம், அனுப்பியிருந்த அன்பர்களுக்கும், ஜீவிய சந்தா நேயர்களுக்கும் அனுப்பியாய் விட்டது.

அன்பர்களே! மகா ஜனங்களாகிய உங்களுடைய ஆதரவையும் அன்பையும் நம்பியே நான் புத்தகங்களை வெளியிட்டு வருவது நீங்கள் அறிந்த விஷயம். இத்தனை புத்தகங்களை ஆதரித்ததே போல் இவ்வனாதைப் பெண்ணையும் ஆதரித்துதவ வேண்டுமாய்க் கோருகிறேன்.

நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி

பத்திரிகை உலகில்

நடைபெறாத சம்பவம்

10-வதாண்டு முதல் நீங்கள் சந்தா நேயர்களா ?	அப்படியாயின் 14-வதாண்டின் சந்தாவை அனுப்பி 5 வருஷங்கள் சேர்ந்தாற் போல ஆதரிப்பதுடன் 1935 வரையில் வெளியான,	முழு விலை ரூ. 2. பெறுமான நாவல்களை இனமாக அடையுங்கள்

புது வருஷ சந்தாவை அனுப்புகையில்,

சந்தா நெம்பரை அவசியம் எழுதுவதுடன்

இனம் நாவலுக்காக தபாற் செலவு நாலணா

சேர்த்தனுப்பவும்.

சந்தா நேயர்களே ! கவனியுங்கள்

இனிமேல் ஒவ்வொரு ஆண்டிலும், அதற்குமுன் 5 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆதரித்த அன்பர்களுக்கு மேற்கண்டபடி இனமளிக்கத் தீர்மானித்திருப்பதால், வருஷாவருஷம் சந்தாதாரர்களாயிருப்பதால் உண்டாகும் அனுகூலத்தை அறியுங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி.

லஞ்சப்பேயின் நடனம்
அதிகார தேவதையின் ஆட்சி
பொறுமையின் புகழ்ச்சி
உண்மைக் காதலின் உயரிய காட்சி
வீரவனிதையின் விசித்திர மாட்சி
வஞ்சகர்கள் வலை வீசும் சூழ்ச்சி
தீயவர்களின் திடுக்கிடும் வீழ்ச்சி
ப்ரமிக்கச் செய்திடும்
படுகொலையின் மர்மம்
மனத்தை யுருக்கிக்
கண்ணீரைப் பெருக்கச்
செய்யும் பலவித
சம்பவங்களும்
நிறைந்த

அநாதைப் பெண்

—விலை ரூ. 1—4—0

நான்
வெளிவந்து
விட்டேன்

கீழ்க்கண்ட
விலாசத்தில்
இருக்கிறேன்.

அன்பர்களே! தயவு செய்து
உங்களது ஆதரவை
அளித்து, அநாதைப் பெண்ணாகிய
என்னை அழைத்துச் செல்லுங்கள்.

(சந்தா நேயர்களுக்கு விலை ரூ. 1.)

" ஜகன்மோகினி ஆபீஸ் "
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை,

ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்

14-வது ஆண்டு ஆரம்பம்	மாதாந்த நாவல் சஞ்சிகை	ஜனவரி 1937

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.
எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8	ஜீவிய சந்தா ரூ. 25	தனிப் பிரதி அணு 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	இனாமாக நாவல்கள் வேண்டுமோ ?	பங்கு 2 பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் புத்தியே புதையல்
பங்கு 3 கௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணம் அனுப்புகிறீர்களோ அத்தனைவது நம்பர் பங்கில் உள்ள புத்தகங்களில்	பங்கு 4 தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணிகாந்தன் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின் கனி சாருலோசனா	ஒன்று இனாம்	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்

182996

“ ஜகன்மோகினி ஆபீஸ் ” திருவல்லிக்கேணி

Kabeer Printing Works, Triplicane, Madras.

தமிழ் நாட்டார்
ஆவலுடன் எதிர்பார்த்த விழா!

அகில இந்திய

தவ நடிகர்

ராஜா சாண்டோ

நடிக்கும்

வ ச ந் த சே ஞ

சிறந்த நடிகர்கள்!

உன்னத கானம்!

அற்புத ஒலிப்பதிவு!

*

நடிக ரத்தினங்கள்:

வி. ஏ. செல்லப்பா

பி. சுந்தர் ராவ்

என்.எஸ்.கிருஷ்ணன்

மிஸ். தனலக்ஷ்மி

" லீலா பாய்

" பத்மாவதி பாய்

" விஜயாள்

மாஸ்டர் சங்கர் ராவ்

(5 வயது)

முதலியோர்.

சிறந்த ஜோடனை!

உயர்ந்த சீன்கள்!

உகந்த பாடல்கள்!

*

ராகினி தேவியின்

நடனம்

அற்புதம்!

டைரக்ஷன்:

ராஜா சாண்டோ

ஸ்டூடியோ:

சரஸ்வதிஸினிடோன்

பூனா.

திருப்பூர் டாக்கீஸ் லிமிடெட்,

திருப்பூர்.

Devi Press, Madras.



வலிகள்

சுளுக்குகள்

Strains

அனாவசியமாக வலியினால் அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரம்புக்குள் நுழைந்து, வலியைச் சமனப்படுத்துவதைக் கவனியுங்கள்.

சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாக்குவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவும் இல்லை.

அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சொஸ்தப்படுத்தும்.